பக்கங்கள் : பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 வைகாசி 03 வெள்ளிக்கிழமை (16.05.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 171

# கிழக்கு முதலமைச்சர் பதவி; இழுபறி இன்னும் முடியவில்லை!

## நேற்றிரவு நடைபெற்ற கூட்டத்தில் முடிவு ஏதும் இல்லை

கொழும்பு,மே 16

**கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் பதவிக்கு பிள்ளையானை நியமிப்பதா அல்லது ஹிஸ்புல்லாவை நியமிப்பதா என்பதில் இன்னும் இறுதி முடிவு எதுவும் எட்டப் படவில்லை. இழுபறி நிலையே தொடர்கிறது.**

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்றிரவு நடைபெற்ற விசேட கூட்டத்தில் முதலமைச்சராக யாரை நியமிப்பது என்பது குறித்து பெரும் இழுபறி இடம்பெற்றது. தீர்க்கமான முடிவு இன்றி கூட்டம் முடிவுற்றது.

அதனால் முதலமைச்சர் பதவியேற்பு நிகழ்வும் ஒத்திவைக்கப்பட்டதாக நம்பகர மாக அறியவந்தது.

அனேகமாக, நேற்றிரவு முதலமைச்சர் யார் என்று தீர்மானிக்கப்பட்டு அவர் இன்று பதவியேற்பார் என்று நம்பப்பட்டது; எதிர் பார்க்கப்பட்டது. இதேவேளை -

முதலமைச்சராகப் பிள்ளையானைத் தெரிவு செய்யவே அரசுத் தலைமை விரும்பு கின்றது என்பதை அரசின் மூத்த அமைச்சர் கள் சிலர் நேற்று இரவுவரை வெளிப் படை யாகக் கோடி காட்டினர்.

புதிய கிழக்கு மாகாண சபையில் இன அடிப்படையில் தனக்கே பெரும்பான்மை ஆசனங்கள் உள்ளன என முன்னாள் அமைச் சர் ஹிஸ்புல்லா தெரிவித்துவரும் கருத்துக் களை இந்த அமைச்சர்கள் நிராகரித்துள்ள னர்.

ஹிஸ்புல்லாவின் இக்கருத்தை நிராக ரித்துள்ள கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த, மாகாண சபைக்கு தெரிவுசெய்யப்பட்ட எட்டு முஸ்லிம்களில் நால்வர் அமைச்சர் அதா வுல்லாவின் கட்சியைச் சேர்ந்தவர்கள் என் பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

**சிங்கள உறுப்பினரின் கருத்து முக்கியமாக அமையும்**

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஐக் கிய மக்கள் சுதந்திர முன்னணி 18 ஆசனங்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வடபோர் முனையில் புதனன்று இரு இராணுவத்தினர் உயிரிழப்பு

கொழும்பு, மே 16

வடபோர் முனையில் புலிகளுக்கும், இரா ணுவத்தினருக்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல்களில் இரு இராணுவத்தினர் உயிரிழந்தனர் என்றும் ஒரு வர் காணாமல் போயுள்ளார் என்றும் மேலும் நான்கு பேர் படுகாயமடைந்தனர் என்றும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மன்னார், பாலம்பிட்டி, பெரிய மடுப் பகுதிகளில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோதல்களில் விடுதலைப் புலிகளின் தரப் பில் குறைந்தது ஆறுபேர் வரை உயிரிழந் திருக்கலாம் என்றும் மூவர் காயமடைந்த னர் என்றும் தெரிவித்துள்ள படையினர், அம் மோதல்களில் தமது தரப்பில் ஒருவர் உயி

(12ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தளபதி நேற்று பலாலி விஜயம்

யாழ்ப்பாணம், மே16

குடாநாட்டின் பிந்திய களநிலைவரம் குறித்து இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா நேற்று ஆராய்ந்தார்.

சிரேஷ்ட அதிகாரிகளுடன் நேற்றுக்காலை பலாலி வந்து சேர்ந்த தளபதியை யாழ். மாவட்ட தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந் திரசிறி வரவேற்றார்.

யாழ். தளபதி, களமுனை தளபதிகள் தற் போதைய நிலைவரம் தொடர்பாக இராணு

(12ஆம் பக்கம் பார்க்க)

### முஸ்லிம்களுக்கு சபாநாயகர், இரு அமைச்சர் பதவிகள்

## கிழக்கு மாகாண சபை இழுபறிக்கு பிள்ளையான் குழு தீர்வு யோசனை

### இணக்கம் ஏற்படாவிட்டால் விலகுவார்கள் என்றும் எச்சரிக்கை

கொழும்பு, மே 16

கிழக்கு மாகாணசபை முதலமைச்சர் பதவி குறித்து உருவாகியுள்ள இழுபறி நிலைக் குத் தீர்வு காண்பதற்காகத் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் யோசனையொன்றை முன்வைத்துள்ளனர் என்று இணையத்தள மொன்று தெரிவித்துள்ளது.

இந்த இணக்கப்பாட்டு யோசனை ஏற் றுக்கொள்ளப்படாவிட்டால் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் ஆறுபேரும் பதவி வில குவார்கள் என்றும் அச்செய்தியில் தெரி விக்கப்பட்டுள்ளது.

மாகாணசபை ஒன்று வழமையாக முத லமைச்சர் ஒருவரையும் ஐந்து அமைச்சர் களையும் கொண்டிருக்கும்.

மேற்படி இணையத்தளச் செய்தியில் பிள்ளையான் குழுவின் யோசனையாக முன் வைக்கப்பட்ட திட்டத்தின்படி -

முதலமைச்சர் பதவியையும் அமைச்சர் பதவி ஒன்றையும் அக்குழு தனக்குக் கோரி யுள்ளது.

முஸ்லிம்களுக்கு இரு அமைச்சர் பதவி களையும் சபாநாயகர் (தவிசாளர்) பொறுப்பை யும் வழங்குமாறும் தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் தமது யோசனையில் தெரிவித்துள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜனநாயகம் மறுக்கப்படுவதால் முஸ்லிம்களும் தமிழர் போல மாற்றுவழி தேடும் ஆபத்து நிலை!

### எச்சரிக்கிறது மு.கா., இனக்கலவரத்தைத் தூண்ட முயற்சி எனவும் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 16

கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவி விவகாரத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு கிழக்கில் உள்ள தமிழ், முஸ்லிம் மக்களிடையே இனக்கலவரத்தைத் தூண்ட அரசு முற்படுகிறது என்று ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸ் தெரிவிக்கின்றது.

அரசின் இவ்வாறான செயற்பாட்டால் ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை இழந்து போகும் முஸ்லிம்கள் ஜனநாயகத்திற்குப் பதிலாக மாற்று வழியொன்றைத் தேடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்று அக்கட்சி மேலும் தெரிவிக்கின்றது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவல கத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலா ளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற் றிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பியான முஹம்மட் நௌஸாத்தே இவ்வாறு கூறி னார். அவர் தொடர்ந்து கூறியவை வரு மாறு:-

பாரிய மோசடிகள் மூலம் கிழக்கு மாகா ணத் தேர்தலில் வெற்றிகொண்ட அரசு, கிழக்கில் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே இனக்கலவரத்தைத் தூண்டிவிடவும் முற் படுகிறது.

கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவிக் கான போட்டியை அடிப்படையாக வைத்தே அரசு இந்தச் சதித்திட்டத்தை முன்னெடுக்கிறது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரியில் நேற்று குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், மே16

பூநகரிப்பகுதியில் நேற்றுப்பிற்பகல் 2 மணியளவில் கிபிர் விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

இரண்டு தடவைகள் அப்பகுதியில் குண்டுகளை விமானங்கள் வீசின.

சேதவிவரங்கள் தெரியவரவில்லை.

(அ-1-207)

## புலிகள் மீதான தடையை இந்தியா நீடித்தது

கொழும்பு, மே 16

புலிகள் மீதான தடையை இந்திய அரசு மேலும் இரு வருட காலத்துக்கு நீடித்துள் ளது என இந்திய அரசு அறிவித்துள்ளது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி புலிகளினால் படுகொலை செய்யப் பட்டதை அடுத்து புலிகள் இயக்கத்தை தடைசெய்யும் முடிவை 1992 ஆம் ஆண் டில் இந்திய அரசு முன்னெடுத்தது.

இந்தத் தடை உத்தரவை ஈராண்டுக் கொருமுறை இந்தியா நீடித்து வருகிறது. இதன்படி எதிர்வரும் 2010 மே மாதம் 14 திகதி வரை இந்தத் தடை உத்தரவு அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## நீதி அமைச்சின் உயர் குழு பூஸா கைதிகளுடன் பேச்சு

கொழும்பு, மே 16

கொழும்பு, வெலிக்கடை நியூ மகஸின் சிறைச்சாலையிலிருந்து கடந்த 10ஆம் திகதி திடீரென பூஸாவுக்கு மாற்றப்பட்ட 68 தமிழ்க் கைதிகளின் நிலையை நீதி அமைச் சின் அதிகாரிகள் குழு ஒன்று கொழும்பிலி ருந்து நேரடியாகச் சென்று பார்வையிட் டது. சம்பந்தப்பட்ட கைதிகளோடும் பூஸா வில் அக்குழு விரிவாக உரையாடியது.

பூஸாவுக்கு மாற்றப்பட்ட கைதிகளில் 13 பேர் நீதிமன்ற விசாரணைகளை எதிர் நோக்கியிருப்பதால் மீண்டும் நியூ மகஸின் சிறைக்குக் கொண்டுசெல்லப்பட்டு விட்ட னர் என்றும் கூறப்படுகின்றது.

எஞ்சிய 55 கைதிகளையும் இரு பெண் அதிகாரிகள் உட்பட மூவரைக் கொண்ட நீதி அமைச்சின் உயர் குழு நேற்றுமுன் தினம் பூஸாவில் சந்தித்துப் பேசியது.

பிரதி நீதி அமைச்சர் வீ.புத்திரசிகா மணி

(12ஆம் பக்கம் பார்க்க)

ஊடக அனுசரணை உதயன்

CHESS ENCOUNTER - 2008

யாழ். இந்துக் கல்லூரி சதுரங்கக் கழகம், யாழ். இந்துக் கல்லூரி இன்ரக்ற் கழகத்துடன் இணைந்து நடத்தும்

மாவட்ட மட்டத்திலான, மாபெரும் சதுரங்கச் சுற்றுப் போட்டி

இடம்: குமாரசுவாமி மண்டபம், யாழ். இந்துக் கல்லூரி. திகதி: 19,20/05/2008

நேரம்: காலை 8.30

இன்ரறக்ட் கழகம், சதுரங்கக் கழகம் - யாழ். இந்துக் கல்லூரி.

CHESS ENCOUNTER JAFFNA HINDU COLLEGE INTERACT CHESS CLUB 2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டின் மருத்துவத் துறையில் வரலாற்று நாயகி டாக்டர் நவமலர்

## இரங்கலுரையில் புகழாரம்

குருநகர், மே 16

அமரத்துவம் அடைந்த டாக்டர் செல்வி நவமலர் கனகரத்தினம் அவரது துணிச்சலான மருத்துவ சேவையினால் யாழ். குடாநாட்டில் மருத்துவத்துறையில் வரலாற்று நாயகியாக கருதப்படவேண்டியவர்.

அமரத்துவம் அடைந்த டாக்டர் ந.கனகரத்தினத்தின் இரங்கல் நிகழ்வில் தலைமை வகித்துப் பேசிய செஞ்சொற்செல்வன் ஆறு திருமுருகன் மேற்கண்டவாறு சொன்னார்.

சுதுமலையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்ற இரங்கல் நிகழ்வில் மேலும் அவர் கூறியதாவது:

டாக்டர் செல்வி. நவமலர் கனகரத்தினம் தாய்மையுள்ளம் கொண்டு யாழ்ப்பாணத்தில் போர்ச் சூழலில் துணிச்சலுடன் கடமையாற்றியவர். யாழ். மருத்துவபீடம் மீண்டும் இயங்க வழயேற்படுத்திக் கொடுத்தவர். குடாநாட்டு மக்களின் வாழ்வின் ஆதாரமான போதனா வைத்தியசாலை அதே இடத்தில் மீள இயங்கவும் வித்திட்டவர். தெல்லிப்பளையில் புற்று நோய் வைத்தியசாலை இயங்க வழி உருவாக்கிக் கொடுத்தவர். முதுமை வந்த போதும் யாழ். குடாவில் உள்ள மக்களுக்கு மருத்துவ சேவை செய்வதற்கு முன்வந்து இறக்கும் வரை மருத்துவ சேவை புரிந்தவர். தெல்லிப்பளை துர்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியுடன் இணைந்து சமயப் பணி ஆற்றியவர். யாழ். பல்கலைக்கழகம் இவரது மருத்துவ, சமய, சமூக பணிகளை கருத்தில் கொண்டு கௌரவ கலாநிதி பட்டம் வழங்கிக் கௌரவித்தது என்றார்.

### வைத்திய துறைக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்

இந்நிகழ்வில் அஞ்சலி உரைநிகழத்திய யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தமது உரையில் தெரிவித்ததாவது:

சுகாதாரத்துறை தமது மூத்த வைத்தியரை இன்று இழந்துள்ளது. டாக்டர் செல்வி. கனகரத்தினம் மருத்துவ சேவைக்காக தம்மை அர்ப்பணித்தவர். நெருக்கடியான போர்ச் சூழல் நிலவிய காலகட்டத்தில் மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் மருத்துவ சேவை புரிந்தவர். 2002 ஆம் ஆண்டில் தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலையை புனரமைக்க வழிசமைத்தவர். அங்கு புற்றுநோய் வைத்தியசாலையை அமைக்க உதவி செய்தவர். யாழ். மாவட்டத்தில் வைத்தியர் பற்றாக்குறை நிலவிய போது தெல்லிப்பளை சுகாதார வைத்திய ஆதிகாரியாக பணிபுரிய முன்வந்து மன உறுதியுடன் பணியாற்றியவர். அவர் எமக்கு ஆலோசகராக, வழிகாட்டியாக இருந்தார். அவரது இழப்பு யாழ். மாவட்ட வைத்தியத்துறைக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு - என்றார்.

அமரர் டாக்டர் செல்வி கனகரத்தினத்தின் பூதவுடலுக்கு நேற்று மு.ப. 9 மணி தொடக்கம் 11 மணிவரை சமயக்கிரியைகள் நடாத்தப்பட்டன. யாழ். போதனா வைத்தியசாலை பணியாளர்கள், யாழ். பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகப் பணிப்பாளர் மற்றும் பணியாளர்கள், மருத்துவர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள், தாதிமார்கள், வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாகக் கலந்துகொண்டு தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து அஞ்சலி உரைகள் இடம்பெற்றன.

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, யாழ். சுகாதார சேவை பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன், காரைநகர் மக்கள் மற்றும் கல்விச் சமூகம் சார்பில் வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் பா.விக்னேஸ்வரன் யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகம் சார்பில் டாக்டர் எஸ். ரவிராஜ், தெல்லிப்பளை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் செல்வி எஸ்.சிவராணி, தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் சார்பில் சிரேஷ்ட பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ். இராஜதுரை, லயன்ஸ் கழகத்தின் சார்பில் மானிப்பாய் வட்டப் பிரதிநிதி லயன். எஸ். அருணாசலம், அகிலஇலங்கை இந்து மாமன்றம் சார்பில் பேராசிரியர் எஸ்.சண்முகதாஸ், யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் சங்கப் பிரதிநிதி ஆகியோர் இரங்கலுரைகளை நிகழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து அன்னாரின் பூதவுடல் யாழ். மானிப்பாய் வீதி ஊடாக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு நேற்று பி.ப. 1.30 மணியளவில் தகனஞ் செய்யப்பட்டது. (அ-51)

## ஆங்கில உச்சரிப்புப் போட்டி நாளை யாழ். பல்கலையில்

யாழ்ப்பாணம், மே 16

சீமா (CIMA) ஆங்கில உச்சரிப்புப் போட்டி நாளை சனிக்கிழமை யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இடம் பெரவுள்ளது.

இந்தப் போட்டிக்கு பதிவு செய்தவர்களை நாளை காலை 9.30மணிக்கு சமுகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (01)

## கொடி வாரம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 16

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தின் கொடிவாரம் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 22ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் இன்று வைத்தியசாலை மண்டபத்தில் கொடிவாரத்தினை ஆரம்பித்து வைப்பார்.

## மூளாயில் வெட்டுக்காயங்களுடன் குடும்பப் பெண் சடலமாக நேற்று மீட்பு

யாழ்ப்பாணம், மே16

மூளாய், பொன்னாலை பெரியகுளம் கிழக்கு கரையிலிருந்து வெட்டுக்காயங்களுடன் குடும்பப் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மூளாய் சுழிபுரத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயாரான திருமதி ரவி வசந்தமலர் (வயது 28) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் மதியம்வரை இவர் காணாமல் போயிருந்தார் என்றும் இவரது தாய் சகோதரர்கள் தேடி அலைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. பின்னர் மாடு கட்டிய குறிப்பிட்ட இடத்துக்கு மாட்டுக்கு தண்ணீர் கொண்டு சென்றாரா என்று உறவினர் தேடிச் சென்றபோது அங்கு இவர் சடலமாக மீட்க்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பி.ப 2.30 மணியவில் உறவினர்களால் சடலம் காணப்பட்டு பொலிஸாரிடம் முறையிடப்பட்டது. நேற்றுக் காலை சம்பவ இடத்துக்குச் சென்ற மல்லாகம் நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் மரண விசாரணைகளை மேற்கொண்டார். பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

சடலத்துக்கு அருகில் கத்தி ஒன்று காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பாக விசாரனை நடத்திய பொலிஸார் சந்தேகத்தின் பேரில் இளைஞன் ஒருவரை கைது செய்து மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்தனர். அவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (1-203)

## மாளிகாவத்தையில் இளைஞர் சுட்டுக்கொலை

கொழும்பு, மே 16

கொழும்பு மாளிகாவத்தைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 31 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்துடன் பாதாளஉலகக் கோஷ்டியினருக்குத் தொடர்பு இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். உயிரிழந்தவரின் சடலம் கொழும்புதேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது. (சி)

## கல்குடாவில் தமிழ் இளைஞர் சுட்டுக்கொலை

வாழைச்சேனை, மே 16

மட்டக்களப்பு, கல்குடா, பட்டியடிச்சேனை ஜி.ரி.இசற் கிராமத்தில் நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் முன்னாள் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரான பொன்னையா சுந்தரலிங்கம் (வயது - 38) என்பவர் உயிரிழந்துள்ளார்.

தனது வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவேளை இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை வைத்தியசாலையின் பிரேத அறையில் நேற்றுப் பிரேதம் வைக்கப்பட்டிருந்தது. வாழைச்சேனை நீதிவான் மாணிக்கவாசகர் கணேசராஜா அங்கு சென்று விசாரணை நடத்தினார். பிரேத பரிசோதனையின் பின்னர் பிரேதத்தை உயிரிழந்தவரின் மனைவியிடம் ஒப்படைக்க உத்தரவிட்ட நீதிவான் இக்கொலைச் சம்பவம் தொடர்பான சாட்சிகளை எதிர்வரும் 22 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (சி)

## உடற்பயிற்சி போட்டி

யாழ்ப்பாணம், மே16

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளுக்கான உடற்பயிற்சிப் போட்டி எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு யாழ். கனகரத்தினம் ம.வியில் நடைபெறவுள்ளது.

பங்குபற்றவுள்ள அணிகளை அன்றைய தினம் காலை 8.30 மணிக்கு வருகை தருமாறு யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (2-2)


## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி செல்வி கி. புஸ்பமாலா அவர்களின்
அன்புத் தாயார்

**திருமதி கிருஷ்ணன் நகுலேஸ்வரி**

*இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரம் அடைந்துள்ளோம். அவர் பிரிவால்துயருற்றிருக்கும் அன்னாரின்குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.*
*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

(74200)
25 ஆம் அணி மாணவர்கள், யாழ். மருத்துவ பீடம்.

## கண்ணீர் அஞ்சலி

சங்கானை பிரதேசசெயலக உத்தியோகத்தரும்
நலன்புரிச்சங்க உறுப்பினருமாகிய
செல்வி சு. பாக்கியலட்சுமி
அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் சுப்பிரமணியம் நல்லம்மா**

அவர்கள் நேற்று (15.05.2008) வியாழக்கிழமை இறைபதம் எய்தியமையை இட்டு அவர்களின் பிரிவுத்துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும், நலன்புரிச்சங்க உறுப்பினர்களும்,
(74194) பிரதேச செயலகம், சங்கானை.

## நெஞ்சகலாத நினைவஞ்சலி

தோற்றம் 22 ★ 04 ★ 1901 — மறைவு 08 ★ 06 ★ 1987



தோற்றம் 07 ★ 07 ★ 1934 — மறைவு 25 ★ 05 ★ 1991



**தியாகராஜா இராஜசிங்கம்** (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்)

**இராஜசிங்கம் இராஜமனோகரன்** (பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர்)

'இராஜகிரி', காசிப்பிள்ளையார் கோயிலடி, தெல்லிப்பழை.
(7419?) குடும்பத்தினர்.


## மரண அறிவித்தல்கள்

### கிருஷ்ணன் நகுலேஸ்வரி (மணி)



சரவணையைப் பிறப்பிடமாகவும் 28, துரைராஜா வீதி, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகக் கொண்ட கிருஷ்ணன் நகுலேஸ்வரி நேற்று (15.05.2008) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி கிருஷ்ணனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஆறுமுகம்-கனகம்மா தம்பதியினரின் அன்பு மகளும், புஸ்பலதா (பிரதேச செயலகம், நல்லூர்), வசந்தகுமார் (லண்டன்), புஸ்பமாலா (மருத்துவபீட இறுதி ஆண்டு மாணவி), மகிந்தகுமார், சுரேஸ்குமார் (விஞ்ஞானபீடம்), டாக்டர் மோகனகுமார் (யாழ்.போதனா வைத்தியசாலை), புஸ்பலதா ஆகியோரின் அன்புத்தாயும், குணராஜா, மொறின் - சித்திரா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், குணடியூக்ஷன் (பொஸ்கோ), மிதுக்ஷன் (பொஸ்கோ) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2008) வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*28, துரைராஜா வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

(74201)

தகவல்:
குடும்பத்தினர்.

### துரைச்சாமிக்குருக்கள் குமாரசாமிசர்மா (மெஞ்ஞானம் ஐயா)

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் ஆதீனத்தை பிறப்பிடமாகவும் கீரிமலையை வசிப்பிடமாகவும் கொண்ட துரைச்சாமிக் குருக்கள் குமாரசாமிசர்மா (மெஞ்ஞானம் ஐயா) அவர்கள் நேற்று (15.05.2008) நண்பகல் 12 மணியளவில் இறைவனடி எய்திவிட்டார்.

அன்னாரின் இறுதிக் கரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு.நகுலேஸ்வரக்குருக்கள், பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகள் இடையிலான உதைபந்தாட்டத்தில் மானிப்பாய் இந்து மாவட்டச் சம்பியன்!

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட போட்டிகளில் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் 17 வயதுக் குட்டபட்ட அணி மாவட்ட மட்டச் சம்பியனாக தெரிவாகியது.

அண்மையில் புனித பத்தரிசியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் வேலணை மத்திய கல்லூரியும் மோதிக்கொண்டன.

இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி வேலணை மத்திய கல்லூரிக்கு எதிராக 4 கோல்களை போட்டு வெற்றிபெற்று மாவட்ட சம்பியனானது.

அரை இறுதிப்போட்டியில் தேவரையாளி இந்துக் கல்லூரிக்கு எதிரான போட்டியில் 6–0 என்ற கோல் கணக்கில் வென்ற மானிப்பாய் இந்துக் கல்லூரி இறுதிப் போட்டிக்கு தகுதியானது என்பது குறிப்பிடத்தக்கது.

நடைபெற்ற 17 வயதுக்குட்பட்ட அணிகளுக்கிடையிலான போட்டி மானிப்பாய் இந்துக் கல்லூரி சகல போட்டிகளிலும் வென்று எதிரணிகளுக்கு எதிராக மொத்தம் 25 கோல்களைப் போட்டமை குறிப்பிடத்தக்கது. இதில் அணியின் தலைவர் கனிஸ்டன் 11 கோல்களை தனது அணிக்காக பெற்றுக்கொடுத்தார். (50)

## அரையிறுதி ஆட்டம் நாளை

பருத்தித்துறை இந்து தமிழ்ப் புத்தாண்டையொட்டி பருத்தித்துறை இலங்கை வங்கி பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் அனுசரணையுடன் நடாத்திவரும் 20 ஓவர் கொண்ட மென்பந்துச்சுற்றுப்போட்டியின் அடுத்த அரையிறுதி ஆட்டம் நாளை 17 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து தும்பளை விவேகானந்தா விளையாட்டுக்கழகம் மோதும். (50–218)



அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த இல்லமெய்வன்மைப்போட்டியில் பாடசாலை விளையாட்டுத் தலைவன் செல்வன் ஜே.யூட்கனீஸ்ரன் ஒலிம்பிக்தீபம் ஏற்றுவதை முதலாவது படத்திலும், பிரதம விருந்தினர் யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி பகுதித் தலைவர் அருட்பணி அலோசியஸ் வெற்றிபெற்ற இல்லத் தலைவருக்கு வெற்றிக்கேடயம் வழங்குதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (1–2–36)

# வலிகாமம் வலய உடற்பயிற்சிப் போட்டியில் மானிப்பாய் மகளிர் கல்லூரி சம்பியனானது!

வலி.வடக்கு.மே16

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற பெண்களுக்கான உடற்பயிற்சிப்போட்டியில் மானிப்பாய் மகளிர் கல்லூரி வெற்றி பெற்று வலிகாமம் கல்வி வலய சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டிகளில் பதினொரு பாடசாலைகளின் அணிகள் கலந்துகொண்டன.

முதல் சுற்றில் பதினொரு பாடசாலை அணிகள் கலந்துகொண்ட போதிலும் இரண்டாம் சுற்றுக்கு மானிப்பாய் மகளிர் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயம், மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, நவாலி மகா வித்தியாலயம் ஆகியவை தெரிவாகின.

இந்தச் சுற்றில் முதலாம் இடத்தை மானிப்பாய் மகளிர் கல்லூரியும் 2 ஆம் இடத்தை நவாலி மகாவித்தியாலயமும் 3 ஆம் இடத்தை மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலையும் பெற்றுக் கொண்டன.

கடந்தாண்டு தேசிய மட்டத்தில் இடம் பெற்றபோட்டியில் மானிப்பாய் மகளிர் கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (50–86)

# யாழ்.லீக் நடத்திய உதைபந்தாட்டப்போட்டி குருநகர் பாடுமீன் வி.க. வெற்றிபெற்றது

குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழக 'ஏ'அணியின் முன்னிலை உதைபந்தாட்ட வீரர்களின் வேகமான ஆட்டம் காரணமாக யாழ்.உதைபந்தாட்ட லீக் நடத்திய விலகல் முறையிலான உதைபந்தாட்ட இறுதிப்போட்டியில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக 'ஏ' அணி பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழக 'ஏ' அணியை 2–1 என்ற கோல்களால் வெற்றியீட்டியது.

யாழ்.உதைபந்தாட்ட லீக் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடாத்திய விலகல் முறையிலான முறையிலான உதைபந்தாட்டப் போட்டியின் இறு திப் போட்டிகள் குருநகர் பாடுமீன் 'ஏ' அணிக்கும் பாஷையூர் புனித அந்தோனி யார் விளையாட்டுக்கழக 'ஏ' அணிக்கும் இடையில் குருநகர் விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இறுதிப்போட்டி தொடங்கியதும் மிகவும் வேகமாக பந்தைத் தட்டிச் சென்ற பாடுமீன் விளையாட்டுக்கழக முன்னணி வீரர்கள் மத்திய முன்னணி வீரன் நிஹால் எடிசனிடம் பந்தைத் தட்டிக்கொடுக்க அவரால் முதலாவது கோல் பாஷையூர் அந்தோனியார் விளையாட்டுக்கழகத்துக்கெதிராக அடிக்கப்பட்டது.அடுத்த நான்காவது நிமிடத்தில் பாடு மீன் விளையாட்டுக்கழக இடது மத்திய வீரன் சுஜீபனால் இரண்டாவது கோல் அடிக்கப்பட்டது.

போட்டியின் இடைவேளைவரை குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக 'ஏ' அணி 2–0 என்ற கோல்களால் முன்னணி வகித்தது. எனினும் இடைவேளை தொடங்கி நடைபெற்ற மறுபாதி ஆட்ட நேரத்தில் பாஷையூர் புனித அந்தோனியார் கழக 'ஏ' அணியினர் விறுவிறுப்பாக விளையாடினர்.

ஆட்டம் முடிவதற்கு ஐந்து நிமிடங்களுக்கு முன்னர் தமது முதலாவது கோலை குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகத்திற்கு எதிராக அடித்தது.

இக்கோலை பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழக முன்நிலை வீரன் சாள்ஸ்ரன் அடித்தார்.

ஆட்ட நேரம் முடிவடைய குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக 'ஏ' அணி 2–1 என்ற கோல்களால் பாஷையூர் புனித அந்தோனியார் கழக 'ஏ' அணியை வெற்றியீட்டி வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கியது.

சிறந்த வீரர்களாக குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக 'ஏ' அணியின் உதைபந்தாட்ட வீரர் நிஹால் எடிசனும் பாசையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழக 'ஏ' அணியின் உதைபந்தாட்ட வீரன் உதயதாஸஉம் தெரிவுசெய்யப்பட்டனர்.(203–51)

# இணுவில் இந்து வெற்றிக் கிண்ணத்தை லெவின்ஸ்டார் கழகம் சுவீகரித்தது

வலி.வடக்கு, மே.16

இணுவில் இந்து விளையாட்டுக்கழகத்தின் 50 ஆவது நிறைவையொட்டி இந்து வெற்றிக் கிண்ணத்திற்காக நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட்போட்டி ஆட்டத்தில் ஆனைக்கோட்டை லெவின் ஸ்டார் விளையாட்டுக்கழகம் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது.

06 ஓவர்கள் கொண்ட 07 பேர் பங்குபற்றும் இப்போட்டியின் இறுதிப்போட்டியில் ஆனைக்கோட்டை லெவின் ஸ்டார் விளையாட்டுக்கழகமும் சுன்னாகம் காந்தி நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகமும் இணுவில் மத்திய கல்லூரி விளையாட்டுக் கழக மைதானத்தில் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய காந்தி நியூஸ்டார் விளையாட்டுக்கழகம் 04 விக்கெட்டுக்களை இழந்து 39 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

கிபோசன் 15 ஓட்டங்களை கூடிய ஓட்டமாக பெற்றுக்கொண்டார். லெவின் ஸ்டார் விளையாட்டுக்கழகத்தின் சார்பில் பந்து வீசிய சர்வானந்தன், மோகனதீபன் கஜன் ஆகியோர் முறையே 4,5,9 ஓட்டங்களை கொடுத்து தலா ஒவ்வொரு விக்கெட்டை கைப்பற்றினார்கள்.

40 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய லெவின்ஸ்டார் விளையாட்டுக்கழகம் 55 ஓவர்கள் நிறைவில் 40 ஓட்டங்களை பெற்று 03 விக்கெட்டுகளை இழந்து பெற்றுக்கொண் டது.

சர்வானந்தன் 31 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுக்கொண்டார்.

காந்தி நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் சார்பில் பந்து வீசிய ஐங்கரன் 08 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் டேவிற் 05 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

ஆட்டநாயகனாக லெவின் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தைச்சேர்ந்த சர்வானந்தனும் போட்டிகளின் தொடர் ஆட்ட நாயகனாக காந்தி நியூஸ்டார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த மயூரதனும் தெரிவு செய்யப்பட்டனர். (50–86)




# யாழ்.இந்துக் கல்லூரி சதுரங்க கழகம் நடத்தும் மாபெரும் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், மே.16

யாழ்.இந்துக் கல்லூரி சதுரங்கக் கழகம் கல்லூரியின் இன்ரறக்ற் கழகத்துடன் இணைந்து மாவட்ட மட்டத்தில் மாபெரும் சதுரங்கச் சுற்றுப்போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

'உதயன்' ஊடக அனுசரணையுடன் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 19 ஆம் 20 ஆம் திகதிகளில் காலை 8.30 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் போட்டிகள் நடைபெறவுள்ளன.

மாவட்ட மட்டத்தில் இடம்பெறவுள்ள இப்போட்டியில் அனைத்துக் கழகங்களும் பங்குபற்றி போட்டியிட முடியுமென்று கூறப்பட்டுள்ளது. (203)

# சாவகச்சேரி பிரதேச பெண்கள் கிரிக்கெட்டில் வளர்மதி வி.க. 48 ஓட்டங்களால் வெற்றி

வலி.வடக்கு மே.16

சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்குகிடையே இடம்பெற்ற பெண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றுச் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மட்டுவில், வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற 5 ஓவர்கள் கொண்ட இப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகம், மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய வளர்மதி விளையாட்டுக்கழககம் 04 விக்கெட்டுக்களை இழந்து 77 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.


பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மோகனதாஸ் விளையாட்டுக்கழகம் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 29 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.



இதனைத் தொடர்ந்து வளர்மதி விளையாட்டுக்கழகம் 48 ஓட்டங்களினால் மோகனதாஸ் விளையாட்டுக்கழகத்தை வெற்றி பெற்று தென்மராட்சி பிரதேச செயலக சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டது. (50–86)



நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான மெய்வன்மைப்போட்டிகளின்போது எடுக்கப்பட்ட படங்கள். நிகழ்வின் விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், நெடுந்தீவுத் துறைமுகத்தில் கடற்படை அதிகாரிகளால் வரவேற்று அழைத்துச் செல்வதை முதலாவது படத்தில் காணலாம். நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் என். திருலிங்கநாதன் கொடியேற்றி போட்டிகளைத் தொடக்கிவைப்பதை இரண்டாவது படத்திலும் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர், யாழ். அரச அதிபர் ஆகியோர் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களை வழங்குதை மூன்றாம் நான்காம் படங்களிலும் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இடம்பெறும் கல்விக் கண்காட்சியை பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் கண்டுகளித்து வருகின்றார்கள். இக்கண்காட்சியில் இடம்பெறும் மானாட்டம், மயிலாட்டம், குதிரையாட்டத்தில் ஒரு காட்சியை முதலாவது படத்திலும் வேடர்களின் வாழ்க்கை வட்டத்தைக் காட்டும் செயற்பாட்டை இரண்டாவது படத்திலும் காணலாம்.

பழைய 'பற்றரி'களைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட புகையிரதத்தை மூன்றாவது படத்திலும் பாவித்து எறியப்படும் குமிழ்முனைப் பேனாக்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பள்ளிகொள்ளும் மாயவனின் உருவத்தை அடுத்த படத்திலும் காணலாம்.

*(படங்கள்: நேசன்)*

# ஸ்கந்தவரோதயாவில் நடைபெறும் கண்காட்சி இன்றுவரை நீடிப்பு

வலி.வடக்கு, மே16

சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இடம் பெற்றுவரும் கல்விக் கண்காட்சி பாடசாலைகளின் வேண்டு கோளின் அடிப்படையில் இன்றும் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு நாள்களிலும் சுமார் 6 ஆயிரத்திற்கும் மேற் பட்ட மாணவர்கள் கண்காட்சியைக் கண்டு களித்தனர்.

இக் கண்காட்சியில் குறிப்பாக நாடகத் துறையினர் மயிலாட்டம், மானாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம் என்பவற்றுடன் சத்திய வான் சாவித்திரி, அருச்சுணன் தவநிலை போன்ற நாடகங்களும் இடம்பெறுகின்றன.

இதேபோன்று ஆரம்பத்தில் காட்டுவாசிகளின் சமயச்சடங்கு களில் பரிணாம வளர்ச்சி நாடகத்துக்கு வித்திட்டமையும் காண் காட்சிகளாகக் காட்டப்பட்டன.

கல்வியியல் துறையில் மேலும் விஞ்ஞானம், சமயம், தமிழ், சமூக வியல் உட்பட அனைத்துத் துறைகளிலும் எழுச்சிகரமான காட்சிப் படுத்தல் மாணவர்களுக்கு பெரும் பயன்பாடுடையவையாக காணப் படுகின்றன. (203-86)

# நாடாளு மன்ற முன்னாள் செயலாளர் சபாநாயகரின் ஆலோசகராக நியமனம்

கொழும்பு, மே16

நாடாளுமன்றத்தின் பிரதம செயலாளராகப் பதவி வகித்து அண் மையில் சேவை யினின்றும் ஓய்வுபெற்ற பிரியானி விஜேசேகர சபாநாயகரின் ஆலோசகராகநியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதியிலிருந்து நடை முறைக்கு வரும்வித்தில் அவருக்கு இந் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற சபாநாயகரின் ஆலோசகர் என்ற விதத்தில், சர்வ தேச நாடாளுமன்றச் சங்கம், பொதுநலவாய நாடுகளின் சங்கம் மற் றும் 'சார்க்' நாடுகளின் அமைப்பு என்பவை தொடர்பான செயற்பாடு களைக் கவனிக்கும் பொறுப்பு பிரியானி விஜேயசேகரவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(205)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் புகழ் பூத்த மாணவிகளில் ஒருவரும் பழைய மாணவர் சங்க முன்னாள் தலைவியும், எமது பாடசாலையின் அபிவிருத்தியில் தொடர்ந்து பங்களித்தவருமான முன்னாள் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரும், தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரியுமான

வைத்திய கலாநிதி செல்வி

**நவமலர் கனகரத்தினம்**

அவர்களது இழப்பினால் ஆறாத்துயரடைகின்றோம். அன்னாரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பழைய மாணவர் சங்கம், பாடசாலை ஆசிரியர் கழகம்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,**
**வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை,**
**யாழ்ப்பாணம்.**

(சி/552868)

## மரண அறிவித்தல்

### கந்தையா வல்லிபுரம்

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வல்லிபுரம் நேற்று 15. 05.2008 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- சின்னாச்சிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்- தில்லைப்பிள்ளையின் அன்பு மருமகனும் கனக சோதியின் அன்புக் கணவரும் கலைச்செல்வி (கிளி), மதிவண் ணன் (மதி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நசூர்டீன், கல்யாணி ஆகியோரின் மாமனும் பானு, ஷபான், சுஜீவன், நிலாநீ, யதுர்ஷன் ஆகியோரின் பாசமுள்ள பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2008) வெள் ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோட் றோட்,
மல்லாகம். (74185)

தகவல்:
வ.மதி (மகன்).

# ஆரோக்கியமும் சத்துணவும் பற்றிய கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 16

யாழ்ப்பாணம் முகாமையாளர்கள் கழ கத்தின் ஆதரவில் ஆரோக்கியம் மற்றும் சத் துணவு தொடர்பான கருத்தரங்கு எதிர்வரும் திங்கட்கிழமை நல்லூரில் உள்ள ஈரோவில் மாநாட்டுமண்டபத்தில்நடைபெறவிருக்கின்றது.

யாழ். மாவட்ட கயரோகக் கட்டுப்பாட் டுப் அதிகாரி டாக்டர் சி.எஸ்.ஜமுனைந்தா தலைமையில் அன்றையதினம் காலை 9 மணிமுதல் பி.ப. ஒரு மணிவரை இக்கருத் தரங்கு நடைபெறும்.

சத்துணவும் ஆரோக்கியமான வாழ்வும் என்பது பற்றி யாழ். போதனா வைத்தியசாலை ஆலோசக மருத்துவர் டாக்டர் எஸ்.கேதீஸ்வ ரன் காலை 9.30 மணிக்கு உரை நிகழ்த்து வார். காலை 10.15 மணிக்கு புற்றுநோய் ஒரு கண்ணோட்டம் என்பது பற்றி யாழ். போதனா வைத்தியசாலை ஆலோசக வைத்தியர் டாக்டர் என்.ஜெயகுமாரன் உரையாற்றுவார். முற்பகல் 11 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலை ஆலோசக மருத்துவர் டாக் டர் எஸ்.பிரேமகிருஸ்ணன் நோய்களும் பராமரிப்பு பற்றி உரை நிகழ்த்துவார்.

இறுதியாக கேள்விநேரமும் விவாத அரங் கும் இடம்பெறும்.

# சுழிபுரம் பறாளை வீதி பற்றைகள் வெட்டித் துப்புரவு

சுழிபுரம், மே 16

சுழிபுரம் பறாளை வீதி பற்றைகள், முள் மரங்கள் வெட்டப்பட்டு வெளியாக்கப்பட் டுள்ளது.

ஆலயத் திருவிழாவையொட்டியே இந்தப் பணி நடைபெற்று வருகின்றது.

சுழிபுரம் பறாளை விநாயகர், முருகன் ஆலயத்திற்கு செல்லும் பாதை இரு பக்கங் களிலும் குளத்தை அண்டிய கரைகளில் நின்ற செடி மரங்களால் போக்குவரத்துக்கு வாகனம் செல்ல முடியாமல் இடைஞ்சலாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (203-28)

# வாரந்தோறும் 500 மாணவர்களுக்கு பசுப்பால் வழங்கப்படுகிறது

வடமராட்சி, மே 16

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தினரால் வாரம் தோறும் பாட சாலைச் சிறார்கள் 500 பேருக்கு பசுப் பால் வழங்கப்பட்டு வருகிறது.

அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம், துன்னாலை தெற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, அல்வாய் மகாத்மா முன்பள்ளி ஆகியவற் றைச் சேர்ந்த சிறார்களுக்கே பசுப்பால் வழங் கப்பட்டு வருகிறது.

இவற்றில் அல்வாய் மகாத்மா முன்பள்ளி மாணவர்களுக்கு வாரத்தில் 5 தினங்களும் பசுப்பால் வழங்கப்படுகிறது. ஏனைய பாட சாலை மாணவர்களுக்கு வாரத்தில் ஒரு நாள் மட்டும் வழங்கப்படுகிறது.

இச்சிறார்களுக்குத் தேவையான பால் வட மராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தில் பெறப்பட்டு வருகிறது.

(203-236)

**ICT Grade 10/11 - R.Kumaran - B.Sc.**
புதிய பிரிவுகள் ஆரம்பம்
**Visual Basic 6.0 & Ms - office**
English medium/ Tamil medium
பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு. TP: 0776577359

**அருள்முருகன் திருமணப் பணியகம்**
நீங்கள் எதிர்பார்க்கின்ற மணமகன்/ மணமகள் இங்குள்ள அதிகளவிலான மணமக்களில் அல்லது பதிவுகளை மேற்கொண்டுவரும் மணமக்களில் இருக்கமுடியும். எமது பணிகளில் தரகு மரபுகளில்லை.
T.P: 222 9334.
03, யாழ்.வீதி, சிறாம்பயடி லேன், யாழ்ப்பாணம். (74181)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி அதிபர்
திரு. மா.ஞானப்பிரகாசம் அவர்களின் அன்புத் தந்தை
**அமரர் வேலுப்பிள்ளை மார்க்**
அவர்களின் மறைவு குறித்து எமது அனுதாபங்களைத் தெரிவித்து கண்ணீர் அஞ்சலிப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

**A/L மாணவ மன்றம்,**
யா/புனித சாள்ஸ் ம.வி.
(74192)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபர்
திரு.மா.ஞானப்பிரகாசம் அவர்களின் அன்புத் தந்தை
**வேலுப்பிள்ளை மார்க்**
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆன்ம ஈடேற்றத்திற்கு இறைவனைப் பிரார்த்தித்து எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்.

**பாடசாலைச் சமூகம்,**
யா/புனித சாள்ஸ் ம.வி யாழ்ப்பாணம். (74193)

## கண்ணீர் அஞ்சலி

சென்.சாள்ஸ் மகாவித்தியாலய அதிபர்
திரு. எம்.ஞானப்பிரகாசம் அவர்களின் அன்புத் தந்தை
**அமரர் வேலுப்பிள்ளை மார்க்**
அவர்களின் மரணச் செய்தி கேட்டு துயரடைகின்றோம்.
அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர் சங்கம்,
யாழ்.கோட்டம். (74189)

யாழ்.கோட்டக் கல்வி அதிகாரியும்,
அதிபர்களும், ஊழியர்களும்.

## துயர் பகிர்கின்றோம்



வைத்திய கலாநிதி செல்வி
**நவமலர் கனகரத்தினம்**
(தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி)
எமது பிரதேச மக்களின் வளமான வாழ்விற்கு மருத்ததுவ பணி மூலம் திட்டங்கள் பல தீட்டி செயற்படுத்தி கொடிய நோயையும், தொற்று நோயையும் இல்லாதொழிக்க அரும்பணியாற்றி வைத்திய சேவையின் மகத்துவத்தை இந்த மண்ணில் நிலைநாட்டி மறைந்த அமரர் அவர்களுக்கு எமது இதய அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*ஈரவிழிகளுடன்:*
**பிரதேச செயலரும் அனைத்து அலுவலர்களும்,**
வலி.வடக்கு பிரதேச செயலகம், தெல்லிப்பழை.
(சி/552869)

## 6ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
05
*
06
*
1932



மறைவு
23
*
05
*
2002

அமரர்
**இளையதம்பி நடராசமூர்த்தி**
திதி: 16.05.2008

பரிவோடு எம்மை வளர்த்து
பாசமாய் அரவணைத்த ஐயா!
காலமெல்லாம் எம்மை விட்டுப் போனதேனோ?
கண்ட கனவுகள் நனவாகும் முன்னே
காலனவன் சடுதியாய் அழைத்தானோ?

உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்.

6ஆம் வட்டாரம்,
மண்டைதீவு. (74184)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபர்களுக்கு மத்தியஸ்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மே16

யாழ்.வலய பாடசாலைகளின் அதிபர்களுக்கான மத்தியஸ்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு அண்மையில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் யாழ்.மாவட்ட பயிற்சி அலுவலர் ப.சனாதனன் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் பயிற்சி அலுவலர் கா. கணேசராசா உட்பட பலர் கருத்துரைகளை வழங்கினர். (203-207)

## நயினை நாகபூசணி அம்மன் ஆலய விசாரணை ஆணைக்குழுவிற்குத் தகவல்கள் அனுப்பக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே16

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம் தொடர்பாக ஆர்வமுள்ளவர்கள் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய விசாரணை ஆணைக்குழுவிற்கு தகவல்களை அனுப்பிவைக்க முடியும் என்று யாழ்.மேலதிக அரச அதிபரும் விசாரணை ஆணைக்குழுவின் தலைவருமான ஆ.சிவசுவாமி தெரிவித்துள்ளார்.

'ஆ.சிவசுவாமி, மேலதிக அரச அதிபர், தலைவர் , நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய விசாரணை ஆணைக்குழு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்' என்னும் முகவரிக்குத் தகவல்களை அனுப்பிவைக்க முடியும்.

தகவல்களை வழங்குபவர்கள் விசாரணை ஆணைக்குழு சமுகமளிக்கக் கோரும் சந்தர்ப்பங்களில் சமுகமளிக்கக் கடப்பாடுடையவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203)

## வினைத்திறன் காண் போட்டியில் கொடிகாமம் ப. நோ.கூ. சங்கம் தெரிவு

யாழ்ப்பாணம்,மே16

இலங்கை கூட்டுறவுச் சங்கங்களிடையே நடத்தப்பட்ட வினைத்திறன் காண் செயற்திறன் போட்டிகளில் தென்மராட்சி கிழக்கு (கொடிகாமம்) பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நாளை பரிசில் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (203-207)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மே16

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் அதிபர்களுக்கான கட்டாயக் கல்வி தொடர்பான செயலமர்வு நாளை காலை 8 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப்பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (203-207)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மே16

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (203-207)

★ ★ ★

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் விசேட கல்வி இணைப்பாளர், வழிகாட்டல் ஆலோசனை ஆலோசகர் ஆகியோருக்கான செயலமர்வு நாளையும் நாளை மறுதினமும் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப்பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (203-207)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மே16

தீவக வலயப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் விசேட கல்விப் பொறுப்பாசிரியர்களுக்கான செயலமர்வுகள் நாளை சனிக்கிழமையும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளன.

காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இச்செயலமர்வுகளில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (203-267)

★ ★ ★

நல்லூர்,மே16

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட முன்பள்ளிகளின் விவரத்திரட்டு மற்றும் சத்துணவு வழங்கல் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் முன்பள்ளிகளின் ஆசிரியர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதில் பதிவுசெய்யாத முன்பள்ளிகளை பதிவு செய்தலும் இடம்பெறும்.(203-111)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மே16

நயினை நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த திருவிழா தொடர்பான கூட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

முற்பகல் 10.30 மணிக்கு கூட்டம் இடம்பெறும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

இறுதிக் கூட்டம் எதிர்வரும் 25ஆம் திகதி மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி தலைமையில் செயலகத்தில் இடம்பெறும் என்றும் கூறப்பட்டுள்ளது. (203-267)




## தென்மராட்சி கிழக்கு கெற்பேலி கிராமத்தில் 90 குடும்பங்கள் நிவாரணம் இன்றிப் பாதிப்பு

யாழ்ப்பாணம்,மே16

தென்மராட்சி கிழக்கு கெற்பேலி கிராம அலுவலர் பிரிவில் உள்ள சுமார் 90 குடும்பங்கள் கடந்த ஜனவரி தொடக்கம் எந்தவொரு நிவாரணப் பொருள்களும் கிடைக்காமல் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

சமுர்த்தி, நலிவுற்றோர் போன்ற வற்றுக்கு உணவுப்பொருள்கள் வழங்கப்படவில்லையெனவும் கூறப்பட்டது.

இவ்வாறான நெருக்கடி நிலைமை காரணமாக வறுமையிலும் வறுமையான மக்கள் என்ன செய்வதென்று தெரியாத துன்ப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டபோதும் பயன் ஏதும் கிடைக்கவில்லை என்று பாதிக்கப்பட்டோர் கூறுகின்றனர்.

உரிய அதிகாரிகள் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வரவேண்டும் என்று அவர்கள் கேட்டுள்ளனர். (203-207)




சுழிபுரம்,மே16

தொல்புரம் மத்தி ஆதிமுத்துமாரி அம்பாள் ஆலய திருவிழா ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203-28)

★ ★ ★

சுழிபுரம்,மே16

பண்ணாகம் விசவத்தனை வைரவ சுவாமி ஆலய வருடாந்தப் பொங்கல் விளக்கேற்றல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்று விசேட அபிஷேக பூசைகள் நடைபெற்று தொடர்ந்து எட்டாவது நாளான 27ஆம் திகதி பிற்பகல் பொங்கல் மடைகள் நடைபெறும். (203-28)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மே16

மட்டுவில் சந்திரபுரம் மகாமுத்துமாரி அம்மன் ஆலய பெருந்திருவிழா கடந்த 10ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் இடம்பெறும். மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (203)

★ ★ ★

மந்திகை,மே16

பருத்தித்துறை ஆத்தியடி விநாயகர் ஆலயத் தேர்த்திருவிழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

இவ்வாலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 10ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (203-218)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மே16

வரணி சுட்டிபுரம் கண்ணகை அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் திங்கட்கிழமை பொங்கல் விழாவுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 31ஆம் திகதி தேர்த்திருவிழாவும் முதலாம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். தினமும் பூசைகள் 8 மணிக்கு ஆரம்பமாகி 3 மணிக்கு நிறைவடையும். (203)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மே16

கச்சாய் கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்தப் பொங்கல் எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் விசேட பாற்காவடிகள், தூக்குக் காவடிகள், பறவைக் காவடிகள் என்பன எடுத்து அடியார்கள் நேர்த்திக் கடன்களை நிவர்த்தி செய்வர். (203)

## சேலை மோட்டார் சைக்கிளுக்குள் சிக்கி வீழ்ந்தவர் காயமடைந்தார்

யாழ்ப்பாணம்,மே16

மோட்டார் சைக்கிள் சில்லுக்குள் சேலை சிக்கிக் கொண்டதில் தூக்கி வீசப்பட்டு குடும்பப் பெண் காயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை நல்லூரில் இடம்பெற்றது.

சம்பவத்தில் காயமடைந்த சாவகச்சேரி, நுணாவில் கிழக்கைச் சேர்ந்த ரி.வசந்தராணி (வயது34) என்பவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (203-207)

## உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபையின் தொழிற்பாடுகள்

### இலவச கழிவகற்றலும் ஒன்று

யாழ்ப்பாணம்,மே.16

நல்லூர் பிரதேச சபை உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

பிரதேச சபையின் உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் வீடுவீடாகச் சென்று சுற்றாடல் தொடர்பான ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர்.

அத்துடன் வீட்டில் சேரும் கழிவுகளை அகற்றுதல், சூழல் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல், வீதிகளில் குப்பைகள் போடுவதைத் தவிர்த்தல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் ஆலோசனை வழங்கி வருகின்றனர்.

நேற்று ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வரும் இந்தச் செயற்பாடு இன்றும் இடம்பெறும் என்று பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர்.

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு இலவசமாகக் கழிவுகளை அகற்ற பிரதேச சபை முன்வந்துள்ளது எனவும் கழிவுகளை உரப்பைகளில் இட்டு வீட்டு வாசல்களில் வைப்பதன் மூலம் அவற்றை இலகுவில் அகற்றமுடியும் என்றும் நல்லூர் பிரதேச சபை துண்டுப்பிரசுரங்கள் மூலம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 24ஆம், 25ஆம் திகதிகளில் இவ்வாறு கழிவகற்றல் இடம்பெறும் என்றும் கூறப்பட்டுள்ளது. (203)

## உள்ளூர் சோளம் புலோலியில் விற்பனை

வடமராட்சி,மே16

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட சோளம் கிலோ 52 ரூபாவாக புலோலி கமநல சேவை நிலையத்தில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

உணவுக்கோ, கால்நடைத் தீவனத்திற்கோ சோளம் தேவையானவர்கள் போதியளவு சோளத்தை இங்கு பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-236)

## பல்கலையில் ஆவணப் படங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன

யாழ்ப்பாணம்,மே16

யாழ்.பல்கலைக்கழக கலை வட்டம் நடத்திவரும் நிகழ்ச்சித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கலைப்பீட புதிய கட்டடத் தொகுதியில் கலைப்பேறு தொடர்பான இரண்டு ஆவணப் படங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

மாமல்லபுரம், சாஞ்சி ஆகிய இரண்டு படங்களே காண்பிக்கப்படவுள்ளன. (203)

## புத்தாக்குநர் கண்காட்சி தென்மராட்சியில்

யாழ்ப்பாணம்,மே16

தென்மராட்சிக் கல்வி வலய பாடசாலைகளின் மாணவர்களால் உருவாக்கப்பட்ட பொருள்களின் கண்காட்சி சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இளம் புத்தாக்குநர் கண்காட்சியினை தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) கோ.வரதராஜமூர்த்தி திறந்துவைத்தார்.

புத்தாக்குநர் கழக உறுப்பினரும் யாழ். பல்கலைக் கழக பௌதிகத்துறை தலைவருமான வைத்திய கலாநிதி ஆர்.சிவயோகநாதன் தலைமையிலான குழுவினர் ஆக்கங்களை மதிப்பிடும் பணியினை மேற்கொண்டனர்.

கண்காட்சியில் 60இற்கு மேற்பட்ட பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. (203-207)




வதிரி திருஇருதயக் கல்லூரியின் நவோதய வாரக் கண்காட்சியின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. கரவெட்டி கோட்டக்கல்வி அலுவலர் க.அம்பலவாணர் கண்காட்சி மண்டபத்தை நாடா வெட்டித் திறந்து வைப்பதை முதலாவது படத்திலும் விருந்தினர்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்: சுந்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசீகர தோற்றத்திற்கு

# சந்தனாலேப

(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)

வெண்சந்தனம், மரமஞ்சள், குங்குமப் பட்டை, கஸ்தூரி, மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔடதங்களின் கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், பாதநாமரை, கண்ணைச் சுற்றி கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகைத் தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம் சுருங்குதல், பிளவுபடுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும்.
ஸ்னானம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் வியர்வை விரத்தை நீக்கி, சருமத்தை ஸ்னானம் செய்வதை இலகுவாக்கும். எடுப்பான கம்பீரத் தோற்றத்தைத் தரும்.




யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REGNO A/L 250


## திருவாசகம் முற்றும் ஓதுதல்

சிவபூமியினர் நடத்தும் தொல்புரத்திலுள்ள ஞான வைரவா ஆலயத்தில் திருவாசகம் முற்றும் ஓதுதல் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை முதல் நடைபெற்றது. முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள முதியவர்களும் பொது மக்களும் பங்கு கொண்டு திருவாசகப் பாடல்களை ஓதினார்.

(202-28)

# கேள்வி அறிவித்தல்

தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு
வடக்கு, கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்டம்
(NECCDEP)
*சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளமைக்கும் திட்டம்*
(TAARP) உட்பிரிவு B
ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
"ஆஅவ" நன்கொடை இல.0006 SRI (SF)

## நிர்மாண வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

1. சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் புனரமைப்புத் திட்டத்தின் (ராப்-பீ-நெக்டெப்) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து (ADB) நன்கொடையொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன் கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக் கொடையின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. இதன் பின்னகத்து தொழில் தருனராக குறிப்பிடப்படும் வடக்கு கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்ட (நெக்டெப்) பணிப்பாளரினால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி சீல்வைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ இல. | மாவட்டம் | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த ICTAD பதிவு கட்டடங்கள் | கேள்விப் பிணைப் பணம்(ரூபா) | மீளளிக்கப்படாதகேள்விப் பணம்(ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01 | யாழ்ப்பாணம் | பருத்தித்துறையில் பொதுச்சந்தைக் கட்டடம் நிர்மாணித்தல் | M3 | 800,000.00 | 2,500.00 |

3. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட வழிகாட்டலுக்கு ஏற்புடையதாக இருக்கும் உள்ளூர் போட்டிக் கேள்விகளுக்கு (விலைகோரல்) தகைமை பெற்ற கேள்வியாளர்கள் கேள்விகளை சமர்ப்பிக்கலாம்.

4. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

5. கேள்வி ஆவணங்களை 16.05.2008 ஆம் திகதியிலிருந்து 11.06.2008 ஆம் திகதி வரை காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 3.00 மணிவரை வேலைநாள்களில் *மாவட்ட திட்ட அலுவலகம் - நெக்டெப், 3 ஆம்மாடி, காணி பதிவாளர் அலுவலக கட்டடம், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.* (தொலைபேசி இல. 021 2227900, தொலைநகல் : 021 2229882, மின்னஞ்சல் neccdepjaffna@sltnet.lk இலிருந்து மேற்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தினை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

6. மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைக்கூறல் பிணையானது கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதியில் இருந்து 120 நாள்களுக்கு செல்லுபடியாகும் விதத்தில் வடக்கு கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்ட பணிப்பாளரின் பெயருக்கு மதிப்பு மிக்க வங்கி ஒன்றில் பெற்ற பிணைப் பணத்துடன் (Bid Bond) கேள்வி பத்திரத்தின் மூலப் பிரதியுடன் இணைக்கப்படவேண்டும்.

7. மூடி சீல் வைக்கப்பட்ட கேள்விகள் யாவும் *தலைவர், திட்ட கேள்விச் சபை, வடக்கு கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்டம் (நெக்டெப்), இல.56, மத்திய வீதி,திருகோணமலை* என்று விலாசமிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் குறிப்பிட்ட பிணைப்பணம் அடங்கலாக 16.06.2008 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்பாக கிடைக்கும்படி அனுப்பப்படவேண்டும் அல்லது இதே விலாசத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்படவேண்டும். இதன் பின்னர் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்கமுடியும்.

8. மூடி சீல்வைக்கப்பட்ட கேள்விகளின் மூலப் பிரதியும், இணைப் பிரதியும் தனித் தனியான உறைகளில் பெயரிட்டு இடப்பட்டு பின் ஒரே உறையில் இட்டு அவ் உறையின் இடது பக்க மேல் மூலையில் நிர்மாண வேலையின் பெயரும் மாவட்டமும் குறிக்கப்பட்டு இதன் தொடர்பாக பந்தி 7 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம் மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.

9. ஒப்பந்த நிறுவனத்தின் பதிவுச்சான்றிதழும் நிறுவனத்தின் முகாமையாளர் மற்றும் நிறுவன அத்தியட்சகர்கள் பெயர் பட்டியலும் கேள்விப் பத்திர முதற் பிரதியுடன் இணைக்கப்பட வேண்டும்.

10. முன்கூட்டிய கேள்வி கோரல் பற்றிய கூட்டம் ஒன்று யாழ்ப்பாண மாவட்ட திட்ட பணிமனையில் 30.05.2008 ஆம் திகதி அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறும். மேலும் அத்தினத்தில் கட்டடம் அமைக்கப்படவுள்ள இடங்களை பார்வையிடுவதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படும்.

11. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர் மேலதிக தகவல்களை யாழ்ப்பாண மாவட்ட திட்ட பணிமனையிலிருந்தும் நெக்டெப் திட்ட பணிமனையிலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

12. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஒரு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

13. கேள்விகள் ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகை சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

*எஸ்.எம்.குருஸ்*
திட்டப் பணிப்பாளர் - நெக்டெப்
இல.56, மத்திய வீதி, உவர்மலை, திருகோணமலை.
தொலைபேசி இல்:026-2225336, 0262225337
தொலை நகல்: 026 2225335 மின்னஞ்சல்: pdcpccdp@sltnet.lk

# நீங்கா நினைவில்...

20ஆம் ஆண்டு நினைவஞ்சலி | 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி





*தோற்றம்: 23.08.1909*
*மறைவு: 28.05.1988*

*தோற்றம்: 28.09.1913*
*மறைவு: 27.10.1992*

**அமரர் கந்தையா செல்வநாயகம்**
(முன்னாள் பட்டின சபைத்தலைவரும், அரச கட்டட ஒப்பந்தகாரரும்)

**திருமதி மகேஸ்வரி செல்வநாயகம்**


*எமது அன்புத் தெய்வத்தின் நினைவாக அவரது ஞாபகார்த்தமாக திறக்கப்பட்ட செல்வா ஞாபகார்த்த மருத்துவ நிலையத்தின் 42 ஆவது ஆண்டு இன்று பூர்த்தியாகின்றது.*
*என்றும் உங்கள் அன்பின் நினைவுகளுடன் இவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

Dr. க.இரத்தினசிங்கம்
மணியம்பதி,
மானிப்பாய்.

**உங்கள் நினைவில் வாழும்:**
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பும்

**தோற்றம்: 05.10.1932**



**மறைவு: 16.04.2008**

# திருமதி கதிரமலை சீனி அம்மா

*அன்பின் இருப்பிடமாய் ஆறுதல் தந்த தெய்வமே*
*உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்*

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று 16.05.2008 வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்துடன் அவரது நினைவஞ்சலியிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் பங்குகொள்வதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் சக உத்தியோகத்தர்கள், அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்திகேட்டு உடன் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மரணச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் தபால், தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர் வளையம் சாத்தி அஞ்சலி செய்தோருக்கும், கண்ணீர் அஞ் சலி அச்சிட்டு வெளியிட்டோருக்கும் மற்றும் இழப்பின் துயரத்தால் நிலைதடுமாறி நின்றவேளை முகம் கோணாது தேவையான உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*இக்கட்டான சூழ்நிலை காரணமாக இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு பணிவோடு வேண்டுகின்றோம்.*

73,பெரியதம்பிரான் வீதி,வண்ணார்பண்ணை,யாழ்ப்பாணம்.

*பிள்ளைகள்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டுப் பெண்களுக்கு மிகுந்த பயனளிக்கும் விவசாயம் சார்ந்த உணவு உற்பத்தித் திட்டம்

யாழ்.குடாநாட்டில் விவசாய உற்பத்தி கூடிய காலத்தில் விவசாய உற்பத்திப் பொருள்களின் விலை குறைவாக இருந்த போதிலும் அவற்றிலிருந்து விவசாயம் சார் உணவு உற்பத்திப்பொருள்கள் செய்யும் ஆர்வம் குறைவாகவே இருந்து வருகின்றது. அத்துடன் யாழ்.குடாநாட்டில் நுகரப்படும் பெரும்பாலான பெறுமதிசேர் உணவுப் பண்டங்கள் இலங்கையின் தென்பகுதியிலிருந்தே கொள்வனவு செய்யப்பட்டு மக்களால் நுகரப்பட்டு வருகின்றன. இப்பொருள்கள் இறக்குமதி சந்தைத் தரத்திற்கு நிகராக யாழ்.குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படுமானால் இவ்வுள்ளூர் பொருள்களும் நல்ல சந்தை வாய்ப்பைப் பெறும்.

இந்நிலையைக் கருத்திற்கொண்டு விவசாயத் திணைக்களத்தால் யாழ்.மாவட்டத்தில் சிறப்பாக இயங்கும் 15 மாதர் கிராம



இயந்திரத்தின் மூலம் நூடில்ஸ் தயாரித்து காட்டப்படுகின்றது

அபிவிருத்திச் சங்கங்களுக்கு (மா.கி.அ.ச.) அவற்றின் பெறுமான அதிகரிப்பு நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கோடு பயிற்சிகளும் உபகரணங்களும் பல்வேறு கருத்திட்டங்களின் மூலம் வழங்கப்பட்டன. இப்பதினைந்து மா.கி.அ.சங்கங்களின் நடவடிக்கைகளும் கண்காணிக்கப்பட்டு அவற்றில் சிறப்பாக இயங்கும் மா.கி.சங்கங்களின் தேவைகள் இனம் காணப்பட்டன. இதன் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட ஏழு மா.கி.அ.சங்கங்களுக்கு அவர்களின் நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கோடு விவசாயம் சார் உணவு உற்பத்தித் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்துகின்றது. இத்திட்டத்தின் நிறைவேற்று முகவராக ஐ.நா. அபிவிருத்தி திட்டமும் நடைமுறைப் படுத்துபவராக விவசாயத் திணைக்களமும் செயற்படுகின்றது.

### விவசாயம் சார் உணவு உற்பத்தித் திட்டத்திற்கான தொழில்நுட்பப் பயிற்சி

விவசாயசார் உணவு உற்பத்தித் திட்டத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட கரணவாய் கிழக்கு, சிறுப்பிட்டி கிழக்கு, அளவெட்டி மத்தி, ஏழாலை, செல்வபுரம், திருநெல்வேலி கிழக்கு மத்தி, கொக்குவில் கிழக்கு ஆகிய ஏழு மா.கி.சங்கங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 18 மா.கி.சங்கங்களின் உறுப்பினர்களைக் கொண்ட குழுவினர் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 5ஆம் திகதி வரை கொழும்பிலுள்ள கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தில் 5 நாள் உணவு பதனிடல் தொடர்பான தொழில்நுட்பப் பயிற்சியினைப் பெற்று திரும்பியுள்ளனர்.

இக்குழுவினை வழி நடத்துவதற்கு உதவுனராகவும் கண்காணிப்பாளராகவும் விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர் ஒருவரும் இப்பயிற்சியில் கலந்துகொண்டிருந்தார்.

முதல்நாள் பயிற்சியின்போது உணவுப் பொருள்களின் போசணை முக்கியத்துவம், பழங்கள், மரக்கறிகளின் அறுவடையின் பின்னரான தொழில்நுட்பம், உணவு பதனிடல், பாதுகாத்தல் தத்துவங்கள், உலர்த்தல் முறையின் தத்துவங்கள் என்பன விரிவுரை மூலம் விளக்கமளிக்கப்பட்டன. வெவ்வேறு மரக்கறிகள், பழங்கள் என்பவற்றிலிருந்து அவற்றின் போசணைப் பெறுமானம், நிறம், தரம் என்பவற்றில் மாற்றமில்லாது உலர்த்தும் முறை பற்றி செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. பழங்களிலிருந்து அவற்றின் இனிப்பு, அமிலம், பெக்ரின் உள்ளடக்கத்திற்கு ஏற்றவகையில் சுகாதார முறையில் ஜாம் உற்பத்தி செய்யும் முறையும் செய்து காட்டப்பட்டது.

பயிற்சியின் இரண்டாவது நாள் தானியங்கள், அவரையினங்கள் பதனிடல் முறைகள் பற்றியும் அவற்றிலிருந்தான மா, உடனடி தோசைமாக் கலவை, உடனடி வடைமாக் கலவை, உடனடி அப்பமாக்கலவை பப்படம் என்பன உற்பத்தி செய்யும் முறை என்பன விரிவுரைமூலமும் செய்முறை மூலமும் விளக்கம் அளிக்கப்பட்டன. பயிற்சி பெற்ற மாதர் சங்கங்கள் எதிர்காலத்தில் இவற்றை உற்பத்தி செய்து யாழ்ப்பாணத்திலும் கூடியளவு அறிமுகம் செய்யலாம்.

மூன்றாம் நாள் பயிற்சியானது மரவள்ளிக்கிழங்கின் பெறுமான அதிகரிப்பையே முக்கியப்படுத்துவதாக அமைந்திருந்தது. மரவள்ளிக் கிழங்கிலிருந்து சயனைட் நஞ்சை அகற்றி உலர்த்திய மரவள்ளிச் சீவல்,




மரவள்ளி மா, மரவள்ளி பொரியல், மரவள்ளி பிட்டு என்பன தயாரிக்கும் முறைகள் விரிவுரை மூலம் விளக்கம் அளிக்கப்பட்டதோடு செய்தும் காட்டப்பட்டன.

இம்முறை மூலம் தயாரிக்கப்படும் மரவள்ளியிலிருந்தான உணவுப் பண்டங்களைப் பயன்படுத்தும்போது சயனைட் நஞ்சினால் ஏற்படக்கூடிய பக்க விளைவுகள் ஏற்படாது. இவற்றுடன் அரிசி, மரவள்ளி என்பவற்றிலிருந்து நிறை போசணை உணவுகளும் தயாரித்துக் காட்டப்பட்டன. அடுத்து உணவு பதனிடலின்போது கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார நடவடிக்கைகள் பற்றிய விரிவுரையும் மாதர் சங்கங்கள் இலாபரகமாக தமது உற்பத்தி நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்தல் கணக்குகளைப் பேணுதல் என்பன பற்றிய விரிவுரையும் இடம்பெற்றது. இறுதியில் பயிற்சியாளர்கள் 5 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு குழு நடவடிக்கை மூலம் சுயதொழில் ஒன்றைத் திட்டமிடுவதற்கு தலைப்புகள் ஒவ்வொரு குழுவாலும் சமர்ப்பிக்கப்பட்டு திட்டமிடல் மேற்கொள்ளப்பட்டது.

நான்காம் நாள் பயிற்சியின்போது குழந்தைகளின் உணவுகளில் காணப்பட வேண்டிய முக்கிய போசணைப் பொருற்கள், குழந்தைகளுக்கான சத்துமா, ஜீவாகாரம் தயாரிப்பு முறை என்பன விரிவுரை மூலமும் செய்முறை மூலமும் விளக்கமளிக்கப்பட்டன. உடனடி இடியப்பமா தயாரிப்பு, அதற்கான இயந்திரங்களைக் கையாளுதல் பற்றிய விரிவுரையும் அன்று இடம்பெற்றது. இயந்திரங்களை உபயோகித்து எக்ஸ்றுசன் சமைத்தல் முறையில் நூடில்ஸ், பஸ்ரா, ரிப்பி ரிப் , சினக்ஸ், குழந்தை உணவுகள் தயாரிக்கும் முறை பற்றிய விரிவுரை அளிக்கப்பட்டதோடு நூடில்ஸ், திரிபோசா என்பன இயந்திரங்



மரவள்ளிக்கிழங்கில் இருந்து நஞ்சற்ற முறையில் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பண்டங்கள் ஆய்வுகூடத்தில் செய்யப்படுவதனைப் படத்தில் காணலாம்.

## யாழ்ப்பாணத்திலும் அதனைச் செயற்படுத்தினால் சிறந்த சந்தை வாய்ப்பைப் பெறமுடியும்

கள் மூலம் தயாரித்தும் காட்டப்பட்டன.

இறுதிநாள் பயிற்சியின்போது உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் பொதி செய்யும் முறை பற்றியும் அவற்றிற்கு சுட்டுத் துண்டு இடும்போது பின்பற்ற வேண்டிய ஒழுங்கு விதிகள் பற்றியும் விரிவுரை மூலம் விளக்கம் அளிக்கப்பட்டது. அதன்பின் உணவு உற்பத்தியின்போது தவறான கையாளுகையால் ஏற்படும் பாதகமான விளைவுகள், அவற்றை தவிர்த்து சுகாதாரத்துடன் எவ்வாறு உணவு உற்பத்தி மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை விளக்கும் படக்காட்சி காட்டப்பட்டது. இறுதியில் மா.கி.அ. சங்கங்கள் பயிற்சியில் கற்றவற்றைக் கொண்டு தாம் செய்யவிருக்கும் உற்பத்தி நடவடிக் கைகள் பற்றி குழுச் செயற்பாடு மூலம் உருவாக்கிய திட்டங்கள் குழுத் தலைவர்களால் பயிற்றுநர்கள் முன் சமர்ப்பிக்கப் பட்டு ஆய்வு செய்யப்பட்டன.

இப்பயிற்சியில் பங்குபற்றிய மா.கி.அ. சங்கங்களுக்கு அவற்றினால் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கும் உணவு பதனிடல் நடவடிக்கைகளின் அடிப்படையில் திட்டத்தில் குறித்தொதுக்கப்பட்ட இயந்திரங்களும் மேலும் பயிற்சிகளும் வழங்கப் படவுள்ளன. எனவே இவை எல்லாவற்றின் மூலமும் இம் மா.கி.அ. சங்க உறுப்பினர்கள் தங்கள் மா.கி.அ. சங்கங்கள் உற்பத்தி நடவடிக்கைகளைத் திட்டமிட்டு இறக்குமதிப் பொருள்களின் தரத்திற்கு நிகரான தரத்தில் உணவுப்பொருட்களை உற்பத்தி செய்து எதிர்காலத்தில் சந்தைப் படுத்தவுள்ளனர்.

**திருமதி கி.சிவதீபன்**
விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர்,
பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி) அலுவலகம்

## தர்மம் ஓர் ஒழுக்கம்

*ஒவ்வொரு பொருளுக்கும் ஐந்து நிலைகள் உள்ளன.*

*அவை அஸ்தி, பாதி, பிரியா, நாமம், ரூபம் என்பவை.*

*முதல் மூன்றும் சத், சித், ஆனந்தமென்றும் கூறப்படுவை. இவையே மனிதனின் நிலையான உண்மை அடிப்படையை குறிப்பவை.*

*நாமம், ரூபம் அதாவது பெயரும் உருவமும் தற்காலிகமானவையே.*

*மனிதனுடைய இயல்பு புனிதமானது, தூய்மையானது, சுயநலமற்றது. ஆனால் காலாவட்டத்தில் மனிதன் உலக சம்பந்தப்பட்ட விஷயங்களிலே அதிகமாக ஈடுபட்டு இழுக்குகளைத் தேடிக் கொண்டுள்ளான். மனிதப் பிறவி எடுத்த ஒவ் வொருவரும் தாமே இந்த சத், சித், ஆனந்தம் என்பதை நன்றாக உணரவேண்டும். எவ்வளவு கல்வி அறிவு பெற்றிடினும், எவ்வளவு செல்வம் சேர்த்திடினும், எப்படிப்பட்ட பட்டம், பதவிகள் பெற்றிடினும், அமைதியைப் பெற்றுவிட முடியாது. இவை நிலையானவையில்லை என்பதை மறக்கலாகாது.*

*மனிதனிடம் இன்று குடி கொண்டிருப்பது அறியாமை என்ற பிணியே. இதைப் போக்க வல்லது 'ஆத்மஞானம்' ஒன்றே. உலக விஷயங்களைச் சார்ந்த செல்வம் எவ்வளவு பெற்றாலும் தான் ஏதோ சாதித்து விட்டதாக நினைத்துக் களிப்பது தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்வதாகும்.*




*இவைகள் வருவது போல் போய் விடக் கூடியவை. சுகமும் துக்கமும் பந்துக்கள் போல் வந்து போகின்றவைகள்.*

*ஆகையால் மனிதன் தன்னுள் இருக்கும் தெய்வத்துவத்தை உணர்வதற்கு முயல வேண்டும். இந்த சரீரத்திற்கே முக்கியத்துவம் கொடுத்து அதைச் சார்ந்தே செயற்படுவது சரியல்ல. இது நீர்க்குமிழி போன்றது. நொடிப்பொழுதில் அழிந்துவிடக் கூடியது. சுகம், துக்கம் இரண்டுமே மனித உணர்வின் வெளிப்படைத் தோற்றங்களே. இந்தச் சரீரத்தின் வெளித்தோற்றத்தில் மயங்கி செயற்படுவது மதியீனம். உள்ளே உள்ள தெய்வத்தின் மீதே நாட்டம் நிலைக்கவேண்டும். ஆத்மா என்பது மிகவும் பவித்ரமானது.*

*சத்தியத்தைச் சார்ந்திருப்பது எல்லாவற்றிற்கும் மேலானது. சனாதனதர்மம் என்பது ஆத்மாவைப் பற்றிய விசாரணை செய்வதே. மனிதனின் முக்கிய கடமை. இந்த சனாதன தர்மத்தைக் கடைப்பிடிப்பதேயாகும்.*

*சரீர தத்துவம் ஒரு முடிவுடையது. ஆத்ம தத்துவம் என்பது நிலையானது; முடிவில்லாதது.*

*நாற்றம் நிறைந்த, வியாதிகள் நிறைந்த குப்பைத்தொட்டி போன்றது சரீரம். இது சம்சார சக்கரத்தை கடக்க உதவாது. ஆகவே இதை நம்பலாகாது. இறைவனின் பாதங்களையே சரணடையவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. மனிதன் ஆத்மஸ்வரூபனே, ஆனால் அவன் இதை மறந்து உலக விஷயங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு அற்ப சுகங்களை நாடி அழிவைத் தேடிக் கொள்கிறான்.*

*தர்மமே சரியான ஒழுக்க முறையாகும். தர்மமே எல்லாவற்றிற்கும் வேர் போன்றது. தர்மமென்றால் ஏதோ அவரவருக்கு விதிக்கப்பட்ட சில கடமைகளைச் செய்வது மட்டுமென்று நினைத்துவிடக் கூடாது. சிலர் தர்மமென்றால் ஒழுக்கத்தைக் குறிப்பது என்று கருதுகின்றனர். இதுவும் சரியல்ல. மனிதன் தனக்குள் இருக்கும் ''சைதன்யத்தை'' தெய்வத்துவத்தை வெளிக்கொணர்வதே உண்மையான தர்மமாகும்.*



திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ நீலாயதாக்ஷி சமேத ஸ்ரீ காயாரோஹண சுவாமிகள் ஆலய தேர்த்திருவிழா அண்மையில் இடம்பெற்றது. சுவாமி தேரில் எழுந்தருளி வருவதைப் படத்தில் காணலாம்.
(பட[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய விசாரணை ஆணைக்குழு

(நம்பிக்கைப் பொறுப்புக்கட்டளைச் சட்டத்தின் 102ஆவது பிரிவின் கீழானது)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் சார்பாக பெறப்பட்ட முறைப்பாடுகளில் தொடர்புடைய ஆவணங்களைப் பரிசீலித்த பின்னர் விசாரணைகள் நடத்துவதற்காக அரசாங்க அதிபரினால் நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் 102 (4) ஆம் பிரிவின் கீழ் பாரதீனப்படுத்தப்பட்ட ஆணைக்குழு தனது விசாரணைகளைத் தற்பொழுது ஆரம்பித்துள்ளது.

மேற்படி ஆலயம் தொடர்பாக ஆர்வமுள்ளவர்கள் இவ்விசாரணை ஆணைக்குழுவிற்குத் தகவல்களை வழங்க விரும்பின் கீழ்வரும் முகவரிக்குத் தங்கள் தகவல்களைத் தபால் மூலம் அனுப்பி வைக்க முடியும். வழங்கப்படும் தகவல்களின் அடிப்படையில் தகவல்கள் வழங்குபவர்கள் விசாரணை ஆணைக்குழு சமுகமளிக்கக் கோரும் சந்தர்ப்பங்களில் சமுகமளிக்கக் கடப்பாடுடையவர்கள் ஆவார்கள்.

திரு.ஆ.சிவசுவாமி,
மேலதிக அரசாங்க அதிபர்/ தலைவர்,
விசாரணை ஆணைக்குழு,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

தபால் முகவரி:
திரு.ஆ.சிவசுவாமி,
மேலதிக அரசாங்க அதிபர்/ தலைவர்,
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன்
ஆலய விசாரணை ஆணைக்குழு,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

(சி/552865)

## வளந்தாஞ்சலி
## திருநெல்வேலி
## அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன்
## வைகாசி விசாகப் பொங்கல்

நாயக வளந்தெடுத்தலை 165 ஆண்டுகளுக்கு
முன் ஆரம்பித்த திருநெல்வேலி கிழக்கு
**சமரபாகுதேவன் வளவு**
**'கல்வீட்டார்'**
**நாகப்பர் வைத்திலிங்கம்**
அவர்களின் பேரனும் நாயக வளந்தின் 2ஆம்
உரிமைக்காரருமாயிருந்த
**அமரர் வேலுப்பிள்ளை நடராசா**
அவர்களினதும், உரிமைக்காரர்
**அமரர் வேலுப்பிள்ளை சின்னராசா**
அவர்களினதும் பாரியார் உரிமைப் பங்காளர்
**திருமதி சி.மகாலட்சுமி**
அவர்களினதும் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல அம்மன் திருவருளை
வேண்டுகின்றோம்.
**காசிப்பிள்ளை மாணிக்கவாசகர்,**
**இரண்டாம் உரிமைக்காரர்**

(சி/552836)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சுப்பிரமணியம் நல்லம்மா

சத்திரத்தை, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் பிரதான வீதி, சித்தங்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் நல்லம்மா நேற்று (15.05.2008) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் இராசலெட்சுமி, சுந்தரலிங்கம் (முன்னாள் முகாமையாளர், காரைநகர் ப.நோ.கூ.சங்கம்), நடராசா (பணியாளர்- கணேசன், ஸ்ரோர்ஸ்- யாழ்ப்பாணம்), கணேசலிங்கம், தர்மராசா, பாக்கியலெட்சுமி (பிரதேச செயலகம்- சங்கானை), நிர்மலாதேவி (INS-GD) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (15.05.2008) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2மணியளவில் காரைநகர் தில்லை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிரதான வீதி,
சித்தங்கேணி. (74170)

தகவல்:
சு.பாக்கியலெட்சுமி (மகள்).

### சின்னராசா சிந்துஜா



ஜேர்மனியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னராசா சிந்துஜா 09.05.2008 வெள்ளிக்கிழமை ஜேர்மனியில் காலமாகிவிட்டார்.

அன்னார் சின்னராசா- சுதாஜினி தம்பதியரின் அன்பு மகளும் பொன்தலன்- பகீரதி (நோர்வே) தம்பதியரின் பெறாமகளும் புத்திசிகாமணி- இந்திரகுமாரி (வதிரி), கிருஷ்ணபிள்ளை- இராசம்மா (கம்பர்மலை) தம்பதியரின் அருமைப் பேர்த்தியும் சியாமினி, சிறிராம், சியாமின் ஆகியோரின் அன்புச் சகோதரியும் திவாகரன், சுதாகரன் (பிரான்ஸ்) பகீரதன், சசிகரன் ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2008) வெள்ளிக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும் என்பதையும், அன்னாரின் துக்க நிகழ்வுகள் வதிரியில் உள்ள எமது இல்லத்தில் பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுதா கோட்டம்,
நெல்லியடி வடக்கு,
வதிரி. (74177)

தகவல்:
புத்திசிகாமணி (பேரன்).
இந்திரகுமாரி (பேர்த்தி).

# VACANCIES
# UNIVERSITY OF JAFFNA, SRILANKA.

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts.

## FACULTY OF MEDICINE

Senior Professor/Professor in Anatomy/Physiology/Community Medicine/ Pathology/Forensic Medicine/ Medicine/ Pharmacology/Psychiatry/ Obstetrics & Gynaecology / Paediatrics / Surgery

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in Anatomy/ Biochemistry/ Physiology/ Community Medicine/ Pathology/ Microbiology / Parasitology / Forensic Medicine/ Medicine/ Pharmacology/Psychiatry/ Obstetrics & Gynaecology/ Paediatrics/Surgery/ Medical Education

Endowment Chair in Oncology/Orthopedic Surgery

Clinical Psychologist

**Note:**

1. Applications are expected from candidates with MBBS Degree for the posts in the Faculty of Medicine.
2. Applications from candidates with BDS and BVSc degree can also be considered for the posts in Biochemistry.
3. Applications from candidates with the following qualifications shall be considered for the Post of Clinical Psychologist:
   (a) A Ph.D in Clinical Psychology or equivalent postgraduate qualifications in that discipline
   (b) First or second class (upper division) in honours degree in Psychology, Sociology, Anthropology or Philosophy with at least one year experience in teaching/ research/ professional work/postgraduate studies
   
   Applicants under category (b) will be considered only if there are no suitable applicants under category (a). An applicant selected under category (b) would be required to undergo training in Clinical Psychology and obtain suitable postgraduate qualifications.

## Para Medical Degree Programme

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in Nursing/ Pharmacy/Medical Laboratory Technology

Demonstrator (on contract) in Nursing/Pharmacy/Medical Laboratory Technology

## FACULTY OF ARTS

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in Hindu Civilization/ Law/ Archeology/ Sanskrit

## VAVUNIYA CAMPUS

### Physical Education Unit

Instructor in Grade III (Age not more than 45 years)

## SALARY AND OTHER BENEFITS

| Post | Salary scale |
|---|---|
| Senior Professor | Rs.57,755 – 11x900 – 67,655/-p.m |
| Professor | Rs.50,905 – 13x850 – 61,955/-p.m |
| Senior Lecturer Gr.I | Rs.42,650 – 7x800 – 48,250/-p.m |
| Senior Lecturer Gr.II | Rs.37,650 – 11x700 – 45,350/-p.m |
| Lecturer (Probationary) | Rs.26,900 – 10x585 – 32,750/-p.m |
| Clinical Psychologist | Rs.26,900 – 10x585 – 32,750/-p.m |
| Demonstrator | Rs.20,755/-(fixed) p.m |
| Instructor Gr. III | Rs.20,755 – 14x260 – 24,395/- p.m. |

**Note:** In addition to the above salary, the following allowances will also be paid:

i. An academic allowance equivalent to 25% of the basic salary (for permanent academic posts)
ii. Cost of living allowance of Rs.2,500/-p.m

**Statutory benefits:**

I. Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above.
II. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system.
III. Gratuity payments
IV. Employees' Trust Fund benefits.
V. Free Medical Services.

**Closing date:**

| | |
|---|---|
| Post of Senior Professor/Professor | - 15.07.2008 |
| Other posts | - 16.06.2008 |

Applications and other documents for the Post of Senior Professor/Professor shall be sent to the Vice-Chancellor with a covering letter. Applications for the other posts shall be sent to the Senior Assistant Registrar/Establishments.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Establishments, University of Jaffna, Sri-Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self –addressed stamped envelope 23x10 c.m. in size.

Those who wish to apply for more than one post should apply in separate forms.

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Applications received after the closing date will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**REGISTRAR,**
UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.

(C/552861)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மனித உரிமைகள் விவகாரத்தில் அரசுத் தரப்பின் சமாளிப்பு

இலங்கையில் மிக மோசமாக இடம்பெறும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக சர்வதேச மட்டத்தில் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியிருக்கும் இலங்கை அரசு, அதை எதிர்கொள்வதற்குப் படாதபாடு படுகின்றது.

இவ்வாரம் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை மனித உரிமைகள் நிலைவரம் அக்கு வேறு ஆணி வேறாகப் பிய்த்து உதறப்பட்டபோது அதைச் சமாளித்துத் 'தாஜா' பண்ணுவதற்கு இலங்கையின் சட்டமா அதிபர் மிகுந்த சிரத்தை எடுக்க வேண்டியிருந்தது என்கின்றனர் அக்கூட்டத்தொடரின் பார்வையாளர்கள்.

இலங்கை நிலைவரம் பற்றிய விவகாரம் இன்று சர்வதேச மட்டத்தில் பரகசியமாகி விட்டதால் மனித உரிமை மீறல் சம்பவங்களில் சிலவற்றையேனும் ஒப்புக்கொண்டு 'சடையும்' நிலைக்கு அவர் தள்ளப்பட்டார்.

''தற்போதைய இக்கட்டான சூழலில் சில தனி நபர்கள் கடத்தப்பட்டிருக்கின்றார்கள். சிலர் காணாமற் போயிருக்கின்றார்கள். குறிப்பிடத்தக்க தொகையினர் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றனர். மிகவும் மர்மமான - அசாதாரணமான - சந்தேகத்துக்கு இடமான - முறையில் மரணங்கள் இடம்பெற்றிருக்கின்றன.'' - என்று ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கையின் சட்டமா அதிபர் ஸி. ஆர். டி. சில்வாவே ஒப்புக்கொண்டிருக்கின்றார்.

இப்படிச் சம்பவங்கள் நிகழ்ந்தாலும் -

உலகின் மிகக் கொடூரம் மிக்க பயங்கரவாத இயக்கமான விடுதலைப் புலிகளோடு அரசுப் படைகள் மோத வேண்டிய நிலை இருந்தாலும் -

எந்த விடயத்தையும் சட்டவிரோதமான முறையிலோ அல்லது சட்டத்துக்குப் புறம்பான விதத்திலோ முன்னெடுத்துக் கையாளும் கொள்கை இலங்கை அரசுக்குக் கிடையாது என்று அங்கு அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

இதனால் கைதோ, தடுத்து வைப்போ, விசாரணையோ, புலனாய்வோ எதுவென்றாலும் இலங்கைச் சட்டங்களுக்கு அமைவாகவும், மனித உரிமைகளை மீறாமலும் மேற்கொள்ளப்பட வேண்டும் என அரசு தனது முகவர் அமைப்புகள் அனைத்துக்கும் கண்டிப்பான உத்தரவு வழங்கியிருக்கின்றது என்று குறிப்பிட்டும் அவர் அங்கு சளாப்பியிருக்கின்றார்.

இலங்கையின் சட்டமா அதிபர் சர்வதேச அரங்கு ஒன்றில் வைத்து இவ்வாறு வாய்ப் பேச்சில் கூறுபவை செவிமடுக்க இனிமையாகத்தான் உள்ளன. ஆனால் செயற்பாட்டில் அவை கசப்பாக இருப்பதைத்தான் அவர் மறந்துவிட்டார். இல்லை, மறைத்துவிட்டார்.

எழுதப்பட்ட சட்டங்களுக்கு மேலதிகமாக, கைது, தடுப்புக்காவல் என்பன நடைமுறையில் எப்படி முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது தொடர்பாக ஜனாதிபதியே வழிகாட்டல் நடைமுறைகளை வெளியிட்டு வழிப்படுத்தியிருக்கின்றார் என அக்கூட்டத் தொடரில் சிலாகித்துக் கூறியிருக்கின்றார் இலங்கை சட்டமா அதிபர்.

ஆனால், இந்த வழிகாட்டல்களும் உத்தரவுகளும் வெறும் காகிதத்தில்தான் - எழுத்தில்தான் - இருக்கின்றன, நடைமுறையிலோ, செயற்பாட்டிலோ இல்லவே இல்லை என்பதுதான் இங்குள்ள துன்பியல் யதார்த்தமாகும்.

இலங்கையில் அரசுக் கட்டுப்பாட்டில் இருக்கும் தமிழர் பிரதேசங்களில் வெள்ளைவானில் வந்து ஆள்களை - தமிழர்களை -திடீர் திடீரெனக் கடத்திச் செல்லும் சம்பவங்கள் இப்போது திரும்பவும் அதிகரித்துள்ளன. இப்படி வெள்ளைவானில் அள்ளிச் செல்லப்படுபவர்கள் அதிகாரிகளால் கைதுசெய்யப்படுகின்றார்களா அல்லது கடத்தப்படுகின்றார்களா என்பது உடன் தெரிய வருவதில்லை. கடத்தப்படுவோரில் பலர் காணாமற் போகின்றனர். வேறு சிலர் பின்னர் பொலிஸ் நிலையங்களிலோ, தடுப்புக் காவல் மையங்களிலோ தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர் என்ற தகவல்கள் காலம் கழித்து வெளியாகின்றன.

இந்தச் சீத்துவ முறையில்தான் இங்கு கைதுகள் தாராளமாக நடைபெறுகின்றன.

முதலில் சந்தேகத்துக்கு உரியவர் மர்மமான முறையில் கடத்தப்படுகின்றார். பின்னர்தான் அவர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு வாழ்வதற்குத் தகுதியுடையவராகக் கணிக்கப்படுபவதா அல்லது மர்மமான முறையில் நிரந்தரமாகக் காணாமற் போனவராக அர்த்தப்பட வேண்டியவரா என்பது தீர்மானிக்கப்படுகின்றது போலும்!

அத்தீர்மானத்தின் அடிப்படையில்தான் சில சமயம் இத்தகைய 'கடத்தல்கள்' பின்னர் 'கைதுகள்' ஆகி, 'கடத்தப்பட்டோர்', 'தடுப்புக்காவல் கைதிகள்' ஆக மாற்றப் படுகின்றார்கள்.

ஆனால், பல சமயம் இத்தகைய 'கடத்தல்கள்' அந்நிலைமையோடு 'கடத்தலாக' முடிந்துவிடுகின்றன. கடத்தப்பட்டவரும் 'காணாமற்போனோர்' பட்டியலில் சேர்க்கப்பட்டவராக மறக்கடிக்கப்பட்டு விடுகின்றார்.

இதுதான் இப்போது இத்தேசத்தில் 'கைதுகள்' இடம்பெறும் போக்கு; சீத்துவம்; நடைமுறை.

நிலைமை இவ்வாறு இருக்கையில் கைதுகள், தடுப்புக் காவல்கள் தொடர்பாக காகிதத்தில் ஜனாதிபதி விடுத்த உத்தரவை மட்டும் காட்டி சர்வதேச சமூகத்தின் காதில் பூச்சுற்ற முயல்கிறார் இலங்கையின் சட்டமா அதிபர்.

இத்தகைய சமாளிப்பு விளக்கங்கள் இனிமேலும் சர்வதேச சமூகத்தின் கவனத்தைத் திசைதிருப்பப் பயன்படமாட்டா என்பதுதான் உண்மை.

# திருகோணமலைத் துறைமுகத்தில் இன்னமும் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லை!

## 'த பொட்டம் லைன்' ஏடு சுட்டிக்காட்டு

திருகோணமலைத் துறைமுகம் பாதுகாப்பானதா? இலங்கையிலுள்ள ஏனைய துறைமுகங்கள் பாதுகாப்பானவையா? என்ற கேள்விகளைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் வசந்த கரன்னகொடவிடம் முன்வைக்கவேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

- இவ்வாறு ''த பொட்டம் லைன்'' ஆங்கில வார ஏடு கேள்வி எழுப்பியுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவற்றின் முக்கிய பகுதிகள் வருமாறு:-

திருகோணமலை துறைமுகத் தில் கடந்த சனிக்கிழமை அதிகாலை நிறுத்தப்பட்டிருந்த விநியோகக் கப்பல் மூழ்கடிப்பட்டமையானது இலங்கையின் பொருளாதாரத்தில் கடுமையான பாதிப்புக்களை ஏற்படுத்தும்.

திருகோணமலைத் துறைமுகத்தின் பாதுகாப்புக்குப் பொறுப்பான படையினர், தமது காவல் அரண்களில் கடந்த சனிக்கிழமை காவல் கடமைகளில் ஈடுபட்டிருந்தனர். ஆனால், விடுதலைப் புலிகளின் லெப்.கேணல் கங்கை அமரன் நீரடி நீச்சல் பிரிவு கொமொண்டோக்கள் தாக்குதலுக்கு ஆயத்தமானார்கள். இத்தாக்குதலுக்கு முன்னர் அவர்கள் துறைமுகத்தின் நடவடிக்கைகள் தொடர்பான புலனாய்வுத் தகவல்களைச் சேகரித்துள்ளனர். நீரடி நீச்சல் பிரிவினர் வெடிகுண்டுடன் துறைமுகத்தை நோக்கி நகர்ந்தபோது, கடற்படையினரின் ''சக்தி'' என்ற விநியோகக் கப்பல் துறைமுகத்தில் இருந்து ஒரு மைல் தொலைவில் நிறுத்தப்பட்டிருந்தது.

முன்னர் கிறீக் தேசத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த 'எம்.வி.இன்வின்சிபிள்' என்ற விநியோகக் கப்பல் துறைமுகத்தில் இருந்து அரை மைல் தொலைவில் நிறுத்தப்பட்டிருந்தது. 83 மீ.நீளமும், 12 மீ.அகலமும் உடைய இக்கப்பல் 3,200 தொன் நிறையை எடுத்துச் செல்லக்கூடியது. எனினும் கடற்புலிகள் ''சக்தி'' என எண்ணி இக்கப்பலை தவறுதலாகத் தகர்த்து விட்டனரா என்ற சந்தேகமும் கடற்படையினருக்கு ஏற்பட்டுள்ளது. அதிகாலை 2.15 மணிக்கு தாக்கப்பட்ட கப்பல் அதிகாலை 4.30 மணியளவில் மூழ்கியது.

இத்தாக்குதல் நடைபெற்ற போது கடற்படையினரின் 10 சுற்றுக்காவல் படகுகள் தேடுதல் வெளிச்சம் பாய்ச்சியபடி துறைமுகப் பகுதிகளில் தேடுதலில் ஈடுபட்டிருந்தன. ஆனால் அவற்றால் விடுதலைப் புலிகளைக் கண்டறிய முடியவில்லை. இப்படகுகளில் சோலார் கருவிகள் இருக்கவில்லை. இக்கருவிகள் நீருக்கு அடியிலான தாக்குதலைத் தடுப்பதற்கு உரியவை.

பொருளாதாரப் பாதிப்புகளைத் தருமா?

2007ஆம் ஆண்டு கடற்படையினர் மேற்கொண்ட ஆழ்கடல் நடவடிக்கைகளின்போது இக்கப்பல் விநியோகங்களை மேற்கொண்டிருந்தது. விடுதலைப் புலிகளின் இத்தாக்குதல் பொருளாதாரத்தில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தவல்லது. வர்த்தக கப்பல் மீது நடத்தப்பட்ட இத்தாக்குதல் இலங்கைக்கு வரும் கப்பல்களின் காப்புறுதி தொகையை அதிகரிக்கச் செய்யும். அது பொருளாதாரத்தில் கடுமையான பாதிப்புக்களை ஏற்படுத்தும். கொழும்பு மற்றும் காலி துறைமுகங்களும் ஆபத்தான துறைமுகங்களாக தரப்படுத்தப்படலாம். திருகோணமலை துறைமுகம் பெரும் பாதுகாப்புக் குறைபாடுகளைக் கொண்டது. இத் துறைமுகத்தின் தென்பகுதி பாதுகாப்பு வலையைக் கொண்டது அல்ல. துறைமுகத்தின் வடபகுதி பாதுகாப்பு வலைகளைக் கொண்டுள்ள போதும் அதிலும் பல குறைபாடுகள் உள்ளன - என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# பிள்ளையான் குழுவினரை நிராயுதபாணிகளாக்குமாறு தேர்தலுக்கு முன் ஆணையாளர் உத்தரவிட்டிருந்தாராம்

## ஆனால் அதிகாரிகள் அதனை உதாசீனப்படுத்தி விட்டனர் என்கிறது ஐ.தே.கட்சி

கொழும்பு, மே 16

கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்கு முன் பிள்ளையான் குழுவை நிராயுதபாணியாக்கவும், தேர்தல் மோசடிகளைத் தடுக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல் ஆணையாளர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார் என்றும் அந்த அதிகாரிகள் அவரது உத்தரவை நிராகரித்துவிட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அதேபோல் இந்தத் தேர்தல் நீதியானதாகவும் சுதந்திரமானதாகவும் நடைபெறறது என்றுதேர்தல் ஆணையாளர் அறிக்கை விடவில்லை என் றும் கூறப்படுகிறது.

இத்தகவலைத் தேர்தல் ஆணையாளரே ஐக்கிய தேசியக்கட்சியிடம் தெரிவித்தார் என்று ஐ.தே.கட்சியின் எம்.பியான திஸ்ஸ அத்தநாயக்க புதனன்று கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் கடந்த புதனன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

தேர்தல் ஆணையாளரை நாம் செவ்வாய்க்கிழமை சந்தித்துத் தேர்தல் மோசடிகள் பற்றி விளக்கிக் கூறினோம். அத்தோடு தேர்தலுக்கு முன் பிள்ளையான் குழுவை நிராயுதபாணியாக்குமாறு நாம் விடுத்த வேண்டுகோளை அவர் நிறைவேற்றவில்லை என்பதை நாம் அவருக்கு ஞாபகப்படுத்தினோம்.

ஆனால், நாம் விடுத்த வேண்டுகோள்கள் அத்தனையையும் நிறைவேற்றுமாறு தேர்தல் ஆணையாளர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார் என்றும் -

ஆனால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அந்த உத்தரவை நிறைவேற்றத் தவறிவிட்டனர் என்றும் - அவர் எம்மிடம் கூறினார்.

• அறிக்கைவிட வில்லை என்கிறார்

அத்தோடு தேர்தல் நீதியானதாகவும் சுதந்திரமானதாகவும் நடைபெற்றது என்று தேர்தல் ஆணையாளர் அறிக்கை விடவுமில்லை. அவர் உண்மையில் தாம் விடுத்த அறிக்கையை எம்மிடம் காண்பித்தார். அவரது அறிக்கை திரிவுபடுத்தப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

அத்தோடு தேர்தல் முடிவுகளை நிராகரிக்கும் அதிகாரம் தன்னிடம் இல்லை என்றும், அந்த அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கே உண்டு என்றும் அவர் எம்மிடம் விளக்கினார்.

உண்மையில் அரசமைப்பின் 17 ஆவது திருத்தச்சட்டத்தின் படி அரசமைப்புக் கவுன்ஸில் அமைக்கப்பட்டிருந்தால் இப்போது தேர்தல் ஆணைக்குழு இருந்திருக்கும். அதனூடாக இத் தேர்தல் மோசடிக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும் - என்றார் அவர்.

# திருத்த வேலைகளுக்காக நாளை மின்தடை செய்யப்படும் இடங்கள்

யாழ்ப்பாணம், மே 16

இலங்கை மின்சார சபையின் யாழ்.அலுவலகத்தால் திருத்தவேலை செய்யப்படவுள்ள பகுதிகளில் நாளை காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை மின்தடை செய்யப்பட வேண்டிய பிரதேசங்களின் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, இணுவில், கோண்டாவில் ஸ்ரேசன் பகுதி, தாவடி, சுதுமலை, குளப்பிட்டி, கொக்குவில், ஆனைக்கோட்டை, காக்கைதீவு ஆகிய பகுதிகளிலும், நாச்சிமார்கோயிலடி, தட்டாதெரு, கோம்பயன்மணல் பிரதேசம், யாழ்.நகரம், புங்கன்குளம் உப மின் நிலையப்பகுதி , பாசையூர் உபமின் நிலையப்பகுதி ஆகிய இடங்களிலும் மின்தடை செய்யப்பட வுள்ளதாக மின்சாரசபை அறிவித்துள்ளது. (203)

# பயிரழிவில் ஈடுபட்ட பசுமாடு பிடிபட்டது

கட்டைவேலி. மே 16

அத்தாய்ப் பகுதியில் பயிரழிவில் ஈடுபட்ட பசு மாடு ஒன்று விவசாயிகளால் பிடிக்கப்பட்டுள்ளது.

வெள்ளை, சிவப்பு நிறம் கொண்ட இம்மாட்டினை யாரும் உரிமை கோராத பட்சத்தில் அது பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என அப்பகுதிவிவசாய அமைப்புகள் தெரிவித்துள்ளன.

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 04 | 17.05.2008 சனிக்கிழமை |
| திதி: திரயோதசி | பி.இ.04.20வரை |
| நட்சத்திரம் : | சித்திரை மு.இ. 11.00வரை |
| சுபநேரம் : | 02.53 - 04.23 |
| ராகுகாலம் : | 08.53 - 10.23 |

# புங்குடுதீவு மாவட்ட வைத்தியசாலையில் வேலணை வைத்திய அதிகாரி கடமையாற்றுவார்

புங்குடுதீவு மாவட்ட வைத்தய சாலையில் பிரதி செவ்வாய், வியாழன், சனிக்கிழமைகளில் வேலணை வைத்தியசாலை வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ஆ.திருநாவுக்கரசு கடமையாற்றுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு மாதத்தில் முதல் செவ்வாய் கிழமைகளில் குழந்தை நலச் சிகிச்சையும் இரண்டாம், நான்காம் செவ்வாய்க் கிழமைகளில் கர்ப்பிணித் தாய்மாருக்கான சிகிச்சையும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு காலை வேளையிலேயே இவரது கடமைகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இவரது கடமைகள் மண்டைதீவு மருத்துவமனையில் பிரதி திங்கள், புதன்கிழமைகளில் பிற்பகல் வேளைகளில் இடம்பெறும்.

இங்கு மாதத்தின் முதல் திங்கட் கிழமைகளில் தாய், சேய்நலச் சிகிச்சை இடம்பெற ஏற்பாடாகி உள்ளது.

அல்லைப்பிட்டி மருத்துவ நிலையத்தில் மாதந்தோறும் மூன்றா வது புதன்கிழமைகளில் தாய்,சேய் நலச் சிகிச்சைகள் நடத்தப்படும் என் றும் கூறப்பட்டுள்ளது. (203-111)

# வைத்தியகலாநிதியின் ஆத்மா சாந்தியடைய துர்க்காதேவி தேவஸ்தானத்தினர் பிரார்த்தனை

யாழ்ப்பாணம், மே16

வைத்தியகலாநிதி செல்வி நவமலர் கனகரத்தினத்தின் ஆத்மா சாந்தி அடைய தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தினர் பிரார்த்தனை செய்கிறனர்.

இது தொடர்பாக கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வெளியிட்டுள்ள பிரார்த்தனைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

துர்க்காதேவி தேவஸ்தானத்துடன் நீண்டகாலத் தொடர்புகொண்ட வைத்தியகலாநிதி நவமலர் கனகரத்தினம் தெல்லிப்பழை வைத்தியசாலையில் மாவட்ட வைத்திய அதிகாரியாக இருந்து யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றவர்.

எமது ஆலயத் திருவிழாக்களின் போது ஆண்டுதோறும் பணியாற்றி வருபவர்.

இவரது இழப்பு ஈடுசெய்ய முடியாத ஒன்றாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்- என்றுள்ளது. (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கூட்டமைப்பின் வேண்டுகோளை கிழக்கிலங்கை மக்கள் நிறைவேற்றினர்

## அரியநேத்திரன் எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, மே16

"கிழக்குத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் வேண்டுகோளை தமிழ் மக்கள் நிறைவேற்றியுள்ளனர்"

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பவை வருமாறு:-

கிழக்குப் பிரதேச மக்கள் அரசின் எண்ணத்தை இந்தத் தேர்தலில் தோற்கடித்துள்ளனர். ஆனால், ஜனநாயகத் தேர்தல் என்று கூறிக்கொண்டு சர்வாதிகார தேர்தல் மூலம் கிழக்கு மாகாணத்தில் 61 வீதமானோர் வாக்களித்தனர் எனக் காட்டப்பட்டாலும், உண்மையில் தமிழ் மக் களில் 40 வீதத்திற்கும் குறைவானவர்களே வாக்களித்துள்ளனர்.

திருகோணமலை மாவட்ட மக்களும், அம்பாறை மாவட்டத்தின் கல்முனைத் தொகுதி மக்களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டிருப்புத் தொகுதி மக்களும் அரசை முழுமையாக நிராகரித்துள்ளனர்.

பட்டிருப்புத் தொகுதியில் வெற்றிலையில் போட்டியிட்டவர்களுக்கு 14,379 வாக்குகள் மட்டுமே கிடைத்தன. அதே வேளை, அரசுக்கு எதிராகப் போட்டியிட்ட ஏனைய கட்சிகளுக்கு 19,150 வாக்குகள் கிடைக்கப்பெற்றன. இதன்படி பட்டிருப்புத் தொகுதியில் 4,781 வாக்குகளால் அரசு தோல்வியைக் கண்டுள்ளது.

இதனைவிட பட்டிருப்புத் தொகுதி தனித் தமிழர்களின் தொகுதியாகும். இந்தத் தொகுதியில் பிரதிநிதித்துவப்படுத் தக்கூடிய வகையில் ஆளும் தரப்பில் இருந்தோ, எதிர்த்தரப்பிலிருந்தோ கிழக்குத் தேர்தலில் எந்த ஒரு உறுப்பினரும் தெரிவு செய்யப்படவில்லை. இதன் மூலம் பட்டிருப்புத் தொகுதிவாழ் தமிழ்மக்கள் கிழக்குமாகாண சபையை முழுமையாக நிராகரித்துள்ளனர் என்பது தெளிவாகின்றது.

எனவே, இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய எமது வேண்டுகோளை ஏற்று அரசுக்கு தமிழ் மக்கள் வாக்களிக்கவில்லை என்பதை இந்தத் தேர்தல் புள்ளிவிவரங்கள் தெளிவாகக் காட்டுகின்றமையை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(சி)


### பரிசுத்த ஆவிக்கு ஜெபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னதநிலையை நான் அடைய வழிகாட்டும், பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருங்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே, என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய ஜெபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதிகூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன்.

ஓ பரிசுத்த ஆவியே! உமக்கு நன்றி
உலக இரட்சகரான இயேசுவே
நீசப்பாவிகள் மேல்
அளவில்லா இரக்கம் உள்ளவரே
முடியாத காரியங்களை
கைகூடப் பண்ணியவரே
எங்கள் இயேசுவே
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

(மூன்று முறை சொல்லவும்)

(74156)

### இலங்கை மின்சார சபை - யாழ்.பிரதேச அலுவலகம்

#### மின்தடை பற்றிய அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் அவசர திருத்த வேலைகளைச் செய்யும் பொருட்டு 17.05.2008 சனிக்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 4 மணிவரை மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின் பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, இணுவில், கோண்டாவில் ஸ்ரேசன் பகுதி, தாவடி, சுதுமலை, குளப்பிட்டி, கொக்குவில், ஆனைக்கோட்டை, காக்கைதீவு, நவாலி, நாச்சிமார் கோயிலடி, தட்டாதெரு, கோம்பயன்மணல் பிரதேசம், யாழ்ப்பாணப் பட்டணம், புங்கன்குளம் உப - மின் நிலையப் பகுதி, பாசையூர் உப - மின் நிலையப் பகுதி.

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றோம்.

பிரதேச மின் பொறியியலாளர்,
இலங்கை மின்சாரசபை,
*யாழ்.பிரதேச அலுவலகம்,*
*சுன்னாகம்.*
14.05.2008

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்"
இலங்கை மின்சார சபை

(சி/552865)

### நன்றியோடு என்றும் நினைக்கின்றோம் வேண்டுகின்றோம்



முன்னாள் உதவிப் பங்குத்தந்தை
அருட்பணி
ம.கே.கருணாரட்ணம்

உதிப்பு
12 * 04 * 1951

மறைவு
20 * 04 * 2008

இறைபணியில் தாகம் கொண்டு வாழ்ந்துவெற்றி வாகை சூடியவனே!
சூடுகின்றோம் செபமாலை உன் விண்ணக பயணத்திற்கு

அருட்தந்தையின் பிரிவால் துயருறும் யாழ்.மறைமாவட்ட ஆயர், குருக்கள், துறவிகள், பொதுநிலையினர், குடும்பத்தினர், குருச்சகோதரன் ஞானரெட்ணம் அடிகளாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

*இவரின் ஆத்ம சாந்திக்காக (16.05.2008) காலை 6 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படுகிறது.*

பங்குத்தந்தை, பங்கு மக்கள்,
புனித அந்தோனியார் ஆலயம், பாசையூர்.

(74183)

### மணமகள்கள் தேவை

இந்து கௌரவ குடும்பம் 1981, செவ்வாய்க் குற்ற முள்ள பூசம் நட்சத்திரம் மணமகனுக்கு, வெளிநாட்டு மணமகளும் 1980 ஆம் ஆண்டு ஆயிலிய நட்சத்திரம், செவ்வாய்க் குற்றமுள்ள ஆசிரியருக்கு உள்நாட்டு மணமகளும் தேவை. எல்லா மதத்தினரின் ஜாதகங்களும் எம்மிடம் உண்டு.

துர்க்கா திருமணசேவை
9,சங்கிலியன் வீதி,நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே. 0214591417 (74173)

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம் 1977, கார்த்திகை நட்சத்திரம் 1ம் பாதம் செவ்வாய்க் குற்றமற்ற கிரக பாவம் 18 உடைய ELECTRONIC ENGINEER, U.K இல் மேல்படிப்பு முடித்து, தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை (மணமகள் Accountant, Engineer, Dental விரும்பத்தக்கது) புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும்.

துர்க்கா திருமணசேவை
9,சங்கிலியன் வீதி,நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே. 0214591417 (74174)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Bahira புறொயிலர் குஞ்சுகள், (Prima) சிகப்பு, வெள்ளைப்பேட்டுக் குஞ்சுகள் 16.05.2008 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

றாஜீவ்,
*நவாலி வீதி, ஆனைக்கோட்டை*

### காணி விற்பனைக்கு

பருத்தித்துறை புதிய A.G/A. காரியாலயத்திற்கு அருகாமையில் 1 ¼ பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: ராஜா சுவைச்சோலை
*பிரதான வீதி, பருத்தித்துறை.*
(சி/552864)

### மரண அறிவித்தல்

#### திருமதி நேசம்மா கந்தசாமி



திருநெல்வேலி கிழக்கு, இராமலிங்கம் றோட்டைப் பிறப்பிடமாகவும், கனடா மொன்றியலை வதிவிடமாகக் கொண்டவருமான திருமதி நேசம்மா கந்தசாமி 14.05.2008 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற துரைச்சாமி - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னையா - பார்வதி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கந்தசாமி அவர்களின் அன்பு மனைவியும் சிவசுப்பிரமணியம் (லண்டன்), காலஞ்சென்ற சண்முகநாதன் (பேபி) மற்றும் பாலசுந்தரம் (கனடா), காலஞ்சென்ற பத்மநாதன் (துரை) மற்றும் விஜயகுமாரன் (கனடா), பரமேஸ்வரன் (கனடா), கணேசலிங்கம் (கனடா), கமலநாதன் (கனடா), தயானந்தன் (கனடா), ஆகியோரின் அன்புத் தாயும் அற்புதமலர் (லண்டன்), சுலோசனா (கனடா), லீலாவதி (கனடா), புஷ்பராணி (கனடா), இலங்கைநாயகி (கனடா), மாலதி (கனடா), நளினி (கனடா), சத்யகலா (கனடா), சுகிர்தா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் ராசம்மா, செல்லையா, அரசமலர், தங்கம்மா ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், தம்பையா, பரமேஸ்வரி, கிருஷ்ணசாமி முதலி மற்றும் ரத்னசபாபதி ஆகியோரின் மைத்துனியும் விஜிதா - ராஜேஸ்வரன், விஜிதன் - பிரியாளினி, பிரதீபன் - மலர்விழி, பிரவீணா - விமல், பிரதீக்கா, ரஜீவன், சஞ்சீவன், துஷ்யந்தி, சயந்தன், ஷியானி - மதனசாந், ஸ்ரீவன், சஜீத், ஹரேஷ், நிஷாந், கீர்த்தனா, பிரதீப், சகானா, சுபானா, பபினா, பானுஜன், டினிஷ், சஞ்ஜே, அஸ்வின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஜபீஷா, ஹர்ஷா, மனுஷா, பிரதிஷா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக 3655 Cote de Liesse இல் அமைந்துள்ள Funeral Home இல் 16.05.2008 வெள்ளிக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் இரவு 9 மணி வரையும் வைக்கப்பட்டு மறுநாள் 17.05.2008 சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பகல் 1 மணி வரையும் இறுதிக் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
தொடர்புகளுக்கு: ரொரன்ரோ
(905) 898 - 6877 (பாலா)/(416) 332 - 8366 (விசயம்)
(416) 513 - 0118 (கமலா), (416) 266 - 0351 (அப்பு)

தகவல்: ரஞ்சன் குடும்பம்,
*இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி.*
தொடர்புகளுக்கு: மொன்றியலில்
(514) 744 - 0753 (விஜிதன்)/ (514) 744 - 4129 (பரமேஸ்)
(514) 956 - 8402 (கணேஸ்) 011 - 44 2082040617 (மணி-லண்டன்)


### போயாதின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மே16

யாழ்.பகவான் சத்தியசாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை போயாதின நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

வேத பாராயணம், காயத்திரி ஜெபம், சாயிறாம அர்ச்சனை, கோளறுபதிகம், பஜனை, சிறப்புச் சொற்பொழிவு என்பன இடம்பெறும். (203)

* * *

அகில இலங்கை திருமுறை மன்றம் நடத்தும் பௌர்ணமிதின நிகழ்வுகள் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 8 மணி தொடக்கம் கந்தர் மடத்தில் உள்ள இந்து சமயப் பேரவை நடராஜப் பெருமான் திருக் கோயிலில் இடம் பெறவுள்ளன. (203)

### முறைசாரப் பயிற்சிகள்

யாழ்ப்பாணம், மே 16

கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் முறைசாரப் பாட நெறிகள் இலவசமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தலையலங்காரம், கேக் ஐசிங், தையல், குக்கரிங், சாறிவேலை, பெயின்றிங், முத்துவேலை ஆகிய பயிற்சி நெறிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவற்றைக்கற்க விரும்புவோர் பாடசாலை அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (203)


### 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
மனோன்மணி நவரத்தினம்

"உன் ஆத்மா சாந்தியடைய வேண்டுகிறேன்"

புத்தூர்,
*ஆவரங்கால்.* (74182)

தகவல்:
கணவர்.

### நீங்காத நினைவில் ஓராண்டு

பிறப்பு
03 * 03 * 1955



இறப்பு
28 * 05 * 2007

அமரர்
நல்லையா பரமலிங்கம்

திதி: 16.05.2008

ஓராண்டு கழிந்ததுவோ ஒப்பற்ற எம் தலைவா
பேராண்டு வாழ்ந்த பெருந்தகையே உம்மை
ஓராண்டென்ன வோராயிரம் ஆண்டும் மறப்போமோ?
சீராண்டு வாழச்சீர் செய்தனையோ ஏன் பிரிந்தாய் எமை?

இன்று (16.05.2008) வெள்ளிக்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும்படி அழைக்கின்றோம்.

*கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்கும்*
மனைவி, மகள்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய். (74171)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழங்கினார் ஜெயசூரியா; முடங்கியது சென்னை!
# 9 விக்கெட் வித்தியாசத்தில் மும்பை அபார வெற்றி



மும்பை, மே16

அதிரடி நாயகன் ஜெயசூரியா மின்னல் வேகத்தில் சதம் விளாச, மும்பை இந்தியன்ஸ் அணி டோனியின் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் மிகச் சுலபமாக வீழ்த்தியது. இதன் மூலம் தொடர்ந்து நான்காவது வெற்றியைப் பதிவு செய்த மும்பை அணி அரையிறுதிக்கான வாய்ப்பைப் பிரகாசப்படுத்திக் கொண்டுள்ளது.

மீண்டும் ஒரு முறை துடுப்பாட்டத்தில் சொதப்பிய சென்னை அணி ஏமாற்றம் அளித்தது. பத்ரிநாத் மட்டும் அரைச்சதம் எடுத்து ஆறுதல் அளித்தார்.

ஐ.பி.எல். ருவெண்ரி/20 தொடர் விறுவிறுப்பாக நடைபெற்றுவருகிறது. நேற்றுமுன்தினம் மும்பையில் நடந்த 36ஆவது லீக் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின.

கடந்த 7 போட்டிகளில் விளையாடாத மும்பை அணித்தலைவர் சச்சின் முதன்முறையாக ஐ.பி.எல். தொடரில் களமிறங்கினார். நாணயச் சுழற்சியில் வென்ற இவர் முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

சென்னை அணிக்கு தொடக்கமே படு மோசமாக அமைந்தது. முதல் ஓவரை பொலக் மிகத் துல்லியமாக வீச, ஓர் ஓட்டம்தான் கிடைத்தது. நெஹ்ரா வீசிய அடுத்த ஓவரில் வித்யூத் மூன்று பவுண்டரிகள் விளாசினார். இவரது அதிரடி அதிக நேரம் நீடிக்கவில்லை. பொலக்கின் வேகத்தில் 16 ஓட்டங்களுடன் வெளியேறினார். பின்னர் பந்துவீச வந்த பிராவோ தனது முதல் ஓவரிலேயே அதிர்ச்சி கொடுத்தார். மிகவும் எதிர்பார்க்கப்பட்ட ரெய்னாவை(1) ஆட்டமிழக்கச் செய்தார்

இந்த நேரத்தில் 9ஆவது ஓவரை வீசிய குல்கர்னி 'இரட்டை அடி' கொடுத்தார். மூன்றாவது பந்தில் பிளமிங் வீழ்ந்தார். ஒருநாள் போட்டி போல நிதானமாக விளையாடிய இவர் 26 ஓட்டங்களை (29 பந்துகளில்) எடுத்தார். 5ஆவது பந்தில் கப்புகெதரவை(0) வெளியேற்றி அசத்தினார். இப்படி முன்வரிசை சரிய சென்னை அணி 8.5 ஓவர்களில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 46 ஓட்டங்கள் எடுத்துத் தத்தளித்தது.

இதற்குப் பின் அணித்தலைவர் டோனி, பத்ரிநாத் இணைந்து அணியை மீட்டனர். ரோகன் ராஜே வீசிய 10ஆவது ஓவரில் பத்ரிநாத் இரண்டு பவுண்டரிகள் அடித்தார். பொலக் வீசிய 11ஆவது ஓவரில் ஆச்சரியம். ஒவ்வொரு பந்தையும் டோனி வீணாக்க ஓர் ஓட்டம்கூட கிடைக்கவில்லை. கடைசிக் கட்டத்தில் அதிரடிக்கு மாறிய டோனி, தார்ன்லி வீசிய 14ஆவது ஓவரில் இரண்டு பவுண்டரிகள் அடித்தார். மறுபக்கம் பிராவோ, நெஹ்ரா ஆகியோரின் ஓவர்களில் பத்ரிநாத் பவுண்டரி மழை பொழிந்தார். பின்னர் ரோகன் ராஜே வீசிய 18ஆவது ஓவரில் ஒரு இமாலய சிக்ஸர் அடித்து அசத்தினார். பிராவோ வீசிய 19வது ஓவரில் டோனி, பத்ரிநாத் தலா ஒரு சிக்ஸர் அடிக்க ஓட்ட எண்ணிக்கை மிக விரைவாக உயரத் தொடங்கியது.

தொடர்ந்து இரண்டாவது அரைச்சதம் கடந்த பத்ரிநாத் 53 ஓட்டங்களுக்கு (7 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள்) பிராவோ பந்தில் அவரிடமே பிடி கொடுத்து வெளியேறினார். சென்னை அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 156 ஓட்டங்களை எடுத்தது. டோனி 43 ஓட்டங்களுடன் (6 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

மும்பை இந்தியன்ஸ் சார்பில் சிறப்பாகப் பந்துவீசிய பொலக் 4 ஓவர்களில் 9 ஓட்டங்களை மட்டும் கொடுத்து ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். குல்கர்னி 3 விக்கெட்டுகளையும், பிராவோ 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

எட்டக் கூடிய இலக்கை விரட்டிய மும்பை இந்தியன்ஸ் அணி சிறப்பான ஆரம்பத்தைக் கண்டது. ரசிகர்கள் எதிர்பார்த்த சச்சின், ஜெயசூரியா ஆகியோர் தொடக்க வீரர்களாகக் களமிறங்கிக் கலக்கினர். மோர்கீல் வீசிய இரண்டாவது ஓவரில் ஜெயசூரியா ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் அடித்து அதிரடியை ஆரம்பித்தார். இவரது அடுத்த ஓவரில் சச்சின், ஜெயசூரியா தலா ஒரு சிக்ஸர் அடித்தனர்.

தொடர்ந்து வாணவேடிக்கை காட்டிய ஜெயசூரியா, கோனி வீசிய 5ஆவது ஓவரில் 3 சிக்ஸர்கள் விளாச, மும்பை வன்கடே அரங்கம் அதிர்ந்தது. மோர்கீல் வீசிய 6ஆவது ஓவரில் 2 சிக்ஸர்கள், 2 பவுண்டரிகள் அடித்தார். முதல் விக்கெட்டுக்காக 82 ஓட்டங்கள் சேர்த்த நிலையில், ஜோகிந்தர் வேகத்தில் சச்சின்(12) பரிதாபமாக 'போல்ட்' ஆனார்.

தனது அதிரடியை அப்படியே தொடர்ந்த ஜெயசூரியா, ஜோகிந்தர் வீசிய 10ஆவது ஓவரில் ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் அடித்தார். கப்புகெதர வீசிய ஓவரில் 'ஹட்ரிக்' சிக்ஸர் அடித்தார். சிறப்பாக ஆடிய அவர் 45 பந்துகளில் சதம் கடந்து அசத்தினார்.

மும்பை இந்தியன்ஸ் அணி 13.5ஆவது ஓவரில் ஒரு விக்கெட் இழப்புக்கு 158 ஓட்டங்களை எடுத்து இலகுவான வெற்றியைப் பதிவுசெய்தது. ஜெயசூரியா 114 ஓட்டங்களுடனும் (9 பவுண்டரிகள், 11 சிக்ஸர்கள்), உத்தப்பா 16 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஆட்ட நாயகன் விருதை ஜெயசூரியா தட்டிச் சென்றார்.

## ஐந்து ஒரு நாள் போட்டிகளில் விளையாட ஹர்பஜனுக்குத் தடை

மும்பை, மே 16

சிறிசாந்த் கன்னத்தில் அறைந்த விவகாரத்தில் ஹர்பஜனுக்கு ஐந்து ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்க இந்தியக் கிரிக்கெட் சபை தடை விதித்துள்ளது. தொடர்ந்து சர்ச்சைகளில் சிக்கினால் வாழ்நாள் தடை விதிக்கப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது. ஹர்பஜனை துாண்டிய சிறிசாந்துக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சகவீரரை தாக்குவது ஐ.சி.சி. விதிமுறை 3.2.1இன் கீழ் மிகப்பெரும் குற்றம். இதற்கு 5 ஒரு நாள் போட்டி அல்லது 3 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்க தடைவிதிக்கப்படும். இதன் அடிப்படையில் ஒழுங்கு முறைக் கமிட்டி, ஹர்பஜனுக்கு 5 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்கத் தடைவிதித்துள்ளது. மீண்டும் ஒரு முறை சர்ச்சையில் சிக்கினால் வாழ்நாள் தடை விதிக்கப்படும் என எச்சரித்துள்ளது.

இந்தத் தடை உடனடியாக அமுலுக்கு வரும் பட்சத்தில் ஹர்பஜன் அடுத்த மாதம் 8ஆம் திகதி தொடங்கும் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் அணிகள் மோதும் முத்தரப்புத் தொடர் மற்றும் ஆசியக் கிண்ணத் தொடரின் முதலிரண்டு போட்டிகளில் விளையாட முடியாது.

இது குறித்து இந்தியக் கிரிக்கெட் சபைத் தலைவர் சரத்பவார் கூறுகையில், "ஹர்பஜனுக்கு 5 ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்கத் தடை விதித்துள்ளோம். இவர் மேலும் ஒழுங்கீனமாக நடந்து கொண்டால் வாழ்நாள் தடை விதிக்கப்படும். ஐ.சி.சி., விதி 3.2.1இன் படி இத்தடை விதித்துள்ளோம். அறிக்கையின் நகல் ஒன்று ஹர்பஜனுக்கு வழங்கப்பட்டுள்ளது." - என்றார்.

## ஜஸ்ரின் ஹெனின் திடீர் ஓய்வு!

பிரசல்ஸ், மே 16

சர்வதேச டெனிஸ் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுகின்றார் என முதல்நிலை வீராங்கனையான ஜஸ்ரின் ஹெனின் திடீரென அறிவித்துள்ளார்.

பெல்ஜியத்தைச் சேர்ந்த 25 வயது டெனிஸ் வீராங்கனை ஹெனின். இந்த ஆண்டில் தொடர்ந்து தோல்விகளை சந்தித்து வந்தார். போதிய தன்னம்பிக்கை இல்லாமல் இருக்கின்றார் என வெளிப்படையாக கூறினார். தற்போது டெனிஸ் உலகிலிருந்து ஓய்வுபெறுகின்றார் என அறிவித்துள்ளார்.

இது குறித்து ஹெனின் கூறுகையில், ''டெனிஸ் அரங்கில் இருந்து உடனடியாக ஓய்வு பெறுகிறேன். இனி சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்கமாட்டேன்.ஒரு குழந்தையின் கனவு முடிவுக்கு வந்துள்ளது.'' - என்றார். ஏழு கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ள ஹெனின் திடீர் ஓய்வு அறிவிப்பை வெளியிட்டுள்ளது டெனிஸ் ரசிகர்களுக்கு மிகுந்த அதிர்ச்சியை அளிக்கக் கூடும். அடுத்த மாதம் பிரெஞ்சு பகிரங்க டெனிஸ் ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்த ஓய்வு அறிவிப்பை அவர் விடுத்துள்ளார். பிரெஞ்சு பகிரங்க டெனிஸ் போட்டியில் நான்கு முறை பட்டம் வென்றுள்ள அவர், கடைசி மூன்று தடவைகளும் அத் தொடரில் சம்பியன் ஆகியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சீனாவில் பூகம்பத்திற்கு 19,500 பேர் வரை பலி!

அரச ஊடகம் தகவல்

பீஜிங், மே 16

சீனாவில் திங்கட்கிழமை ஏற்பட்ட பூகம்பத்திற்கு 19,500 பேருக்கு மேற்பட்டோர் பலியாகியுள்ளனர் என்று பிந்திய கணிப்பீடு தெரிவிக்கின்றது என அரசு ஊடகமான சிங்குவா தகவல் வெளியிட்டுள்ளது. இந்தத் தொகை 50 ஆயிரமாக உயரலாம் என்றும் அந்த ஊடகம் அச்சம் தெரிவித்துள்ளது.

சிசுவான் மாகாணத்தில் ஒரு கோடி மக்கள் பூகம்ப அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். கிராமங்கள் முழுமையாக நிர்மூலமாக்கப்பட்டுள்ளன. இப்பூகம்பம் ரிச்டர் அளவுகோலில் 7.9 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

26 ஆயிரம் பேர் வரை இன்னும் கட்டட இடிபாடுகளுக்கிடையில் சிக்குண்டிருக்கின்றார்கள். சிசுவான் மாகாணத்தில் நிவாரண மீட்புப் பணிகளில் ஈடுபடுவதற்காக தற்போது மேலதிகமாக 30 ஆயிரம் துருப்புக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே 50 ஆயிரம் துருப்புக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் அந்த ஊடகம் விவரித்துள்ளது.

## மியன்மாருக்கு சிரேஷ்ட அதிகாரியை அனுப்புகின்றார் ஐ.நா. செயலாளர்

நியூயோர்க், மே 16

நர்கிஸ் சூறாவளியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காக வெளிநாட்டு உதவிகளைப் பெறு வதிலும் தன்னார்வத் தொண்டர்களை அனுமதிப்பதிலும் கடைப்பிடிக்கப்பட்டு வரும் கட்டுப்பாடுகளைத் தளர்த்துமாறு மியன்மார் இராணுவ ஆட்சியாளர்களைக் கேட்டுக் கொள்வதற்காக ஐ.நாவின் சிரேஷ்ட அதிகாரியொருவரை அங்கு அனுப்பி வைக்க செயலாளர் நாயகம் பான் கீ முன் முடிவுசெய்திருக்கிறார்.

''ஐ.நா.உதவிப் பிரிவின் பிரதம அதிகாரி ஜோன் ஹோல்ம்ஸே அனுப்பி வைக்கப்படவுள்ளார். இவருடன் விநியோகத்துக்கான உணவுப் பண்டங்களும் அனுப்பி வைக்கப்படும். மியன்மாருக்கு மென்மேலும் உடனடி நிவாரண உதவிகள் வழங்கப்படும். உதவிகள் வழங்க வாக்குறுதிகள் அளித்துள்ள நாடுகளைக் கொண்ட மாநாடொன்றையும் நடத்த நான் திட்டமிட்டுள்ளேன்.'' - என்று மூன் தெரிவித்துள்ளார்

12 நாள்களுக்குள் முன்னர் மியன்மாரைத் தாக்கிய நர்கிஸ் சூறாவளி அனர்த்தங்களால், 25 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என ஐ.நா மதீப்பீடு செய்துள்ளது. 38,500 பேர் மரணித்துள்ளனர். 27,838இற்கு மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர் என மியன்மாரின் பிந்திய உத்தியோகபூர்வத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

மரணித்தோரின் எண்ணிக்கை 128,000 வரை இருக்கலாமென, செஞ்சிலுவைச் சங்கம் அச்சம் தெரிவித்துள்ளது. மியன்மாருக்கு உதவிகள் புரியுமாறு, நன்கொடையாளர்கள் நாடுகளையும் தென்கிழக்காசிய நாடுகளையும், புதன்கிழமை, ஐ.நா.செயலாளர் நாயகம் கேட்டிருக்கின்றார்.

### வெளிநாட்டு உதவிகள் தேவையில்லை என்ற நிலைப்பாடு

உடனடி நிவாரண உதவிகளுக்கு வழிசெய்யும் பொருட்டும் அவசர உச்சி மாநாடொன்றைக் கூட்டுமாறும் ஐ.நாவை பிரிட்டன் கேட்டுள்ளது. மியன்மாரின் தற்போதைய நிலைப்பாடு குறித்து ஐ.நா. செயலாளர் நாயகம் குறிப்பிடுகையில், மியன்மார் அதன் கட்டுப்பாடுகளை ஓரளவு தளர்த்தியுள்ளது. இன்றைய அவசர அவசிய தேவைகளுக்காக இத்தளர்வு பெரிதும் அனுகூலமாக அமையும் என்பதற்கில்லை எனத் தெரிவித்துள்ளார்.

தாய்லாந்து ஜனாதிபதி சமாக் சுந்திர விராஜ், மியன்மார் பிரதமர் தீன் ஷீனோடு பேச்சுகள் நடத்த ரங்கூன் சென்றிருந்தார். பின்னர் தம் விஜயம் குறித்து அவர் ஊடகங்களுக்குக் குறிப்பிடுகையில், தங்கள் நாட்டுக்கு வெளிநாட்டு உதவிகள் தேவையில்லை எனக் கூறும் இராணுவ ஆட்சியாளர்கள் இது விடயத்தில் தமது பிடிவாதப் போக்கை மாற்றிக் கொள்ளும் நிலையில் இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

## பர்தா உடையணிந்த தற்கொலைதாரி கைவரிசை
## ஆப்கானிஸ்தானில் 16 பேர் பரிதாப உயிரிழப்பு

காபூல்,மே 16

பார்தா உடையில் வந்த தற்கொலை குண்டுதாரியொருவர், மேற்கு ஆப்கானிஸ்தானிலுள்ள சந்தைப் பகுதியில் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில் 16 பேர் கொல்லப்பட்டனர். 22பேர் காயமடைந்தனர். குண்டுதாரியின் உடலும் சிதைந்து விட்டது என மாகாண அதிகாரி யூ தஸ் ரசூல் தெரிவித்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற இக்குண்டுத் தாக்குதலில் பலியானோரில் மாவட்ட பொலிஸ் அதிபர் உட்பட 3 பொலிஸார், 13 சிவிலியன்கள் ஆகியோர் அடங்குவர். பாரஹ் மாகாணத்தைச் சேர்ந்த டிலாராம் மாவட்டத்தில் இச்சந்தை அமைந்துள்ளது என்றும் அவர் குறிக்கப்பட்டுள்ளார்.

சந்தேகத்துக் கிடமான முறையில் நடந்து கொண்ட நபரை பொலிஸார் தடுத்து நிறுத்த முற்பட்ட போது, அவர் தன்னிடமிருந்து குண்டை வெடிக்க வைத்துள்ளார். குண்டு வெடிப்பால் அக்கம் பக்கக் கட்டிடங்களும் சேதமடைந்துள்ளன என்றும் அவர் விவரித்துள்ளார்.

தலிபான் போராளிகளின் அரசுக்கு எதிரான போராட்டங்கள் ஆப்கான் கிழக்கிலும் தெற்கிலும் அதிகரித்த வண்ணமுள்ளன. கடந்த ஆண்டு ஆப்கானில், 140இற்கு மேற்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை போராளிகள் நடத்தியுள்ளனர். அவற்றில் பலியானோர் அனேகர் சிவிலியன்களே ஆவர் என பாதுகாப்பு வட்டாரம் தெரிவித்துள்ளது.

2008 இல் இதுவரை, பயங்கரவாதம் தொடர்பான மோதல்களில் ஆப்கானில் 1, 200 பேர் வரை பலியாகியுள்ளனர். இவர்களில் பெருந்தொகையானோர் தீவிரவாதப் போராளிகளாவர் என ஏ.பி. செய்தி நிறுவனத் தெரிவித்துள்ளது.

2007 ஒரு வருடத்திய மோதல்களில் 8 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் அதிகமானோர் தீவிரவாதப் போராளிகளே யாவர் என ஐ.நா. குறிப்பிட்டுள்ளது.

## சிறையிலுள்ள ஹிண்ட்ராப் தலைவர்களை விடுவிக்க மலேஷிய உச்சநீதிமன்று மறுப்பு

கோலாலம்பூர், மே 16

மலேஷியாவில் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள 5 இந்திய வம்சாளியினரையும் விடுவிக்கக்க அந்நாட்டு உச்ச நீதிமன்றம் மறுத்துவிட்டது. அதனால் அவர்களை விடுவிக்க இந்து உரிமை மீட்பு இயக்கம் (ஹிண்ட்ராப்) எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

இந்திய வம்சாவளியினருக்கு சம உரிமை கோரி கடந்த நவம்பர் மாதம் கோலாலம்பூரில் பெரும் பேரணி நடத்தப்பட்டது. இந்தப் பேரணியில் பொலிஸார் அடக்குமுறையை ஏவிவிட்டதால் கலவரம் ஏற்பட்டது. இதையடுத்து இந்தப் பேரணிக்கு ஏற்பாடு செய்திருந்த ஹிண்ட்ராப் இயக்கத் தலைவர்கள் 5 பேர் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர். இவர்களை விடுவிக்குமாறு மலேஷிய உயர் நீதிமன்றத்தில் ஆள்கொணர்வு மனுத் தாக்கல் செய்தார். இந்த மனுவை நீதி மன்றம் தள்ளுபடி செய்ததோடு அவர்களை விடுவிக்க மறுத்துவிட்டது.

இதை எதிர்த்து மலேஷிய உச்ச நீதி மன்றத்தில் அவர்கள் மேன்முறையீடு செய்தனர். தலைமை நீதிபதி அலாவுதின் முகமது ஷரீப் தலைமை யில் 3 நீதிபதிகள் இதை நேற்று முன்தினம் விசாரித்தனர். இந்து உரிமை மீட்பு இயக்கத் தலைவர் 5 பேரும் சட்டப்படிதான் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் சட்ட மீறல் ஏதும் இல்லை என்று நீதிபதிகள் கூறினர். அவர்களை விடுவிக்கவும் உச்ச நீதிமன்றம் மறுத்துவிட்டது.

இந்தத் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யக் கோரி மீண்டும் மனுச் செய்ய இருப்பதாக அவர்களது வழக்கறிஞர் கர்பால் சிங் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. மனித உரிமைக் கவுன்ஸில் தேர்வில் இலங்கையை தோற்கடிக்குமாறு டெஸ்மண்ட் ரூட்டு பகிரங்கக் கோரிக்கை

## தெரிவுசெய்யப்படும் தகுதி எதுவும் அதற்குக் கிடையாது என்கிறார் அவர்

கொழும்பு, மே 16

ஐக்கிய நாடுகள் மனித உரிமை கவுன்ஸில் இடம்பெறுவதற்காகப் போட்டியிடும் நாடுகளில் இலங்கையே அதற்கான தகுதிஎதுவும் இல்லாத நாடு எனத் தெரிவித்துள்ள தென்னாபிரிக்க பேராயரும், மனித உரிமை ஆர்வலரும், சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவருமான வண.டெஸ்மண்ட் ரூட்டு அத்தேர்வில் இலங்கையைத் தோற்கடிக்குமாறு பகிரங்க வேண்டுகோளும் விடுத்துள்ளார்.

இலங்கையைத் தோற்கடிப்பது அந்த நாட்டு மக்களுக்கு ஆறுதலாக அமையும். மனித உரிமைகளை மதிக்குமாறு சர்வதேச ரீதியில் அந்த நாட்டு அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்படுவதற்கு அது வழிவகுக்கும்.

அத்துடன், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்தை இலங்கையில் அமைப்பதை இலங்கை அரசு கடுமையாக எதிர்த்து வருகின்றது. மேற்படி தேர்வில் இலங்கையைத் தோற்கடிப்பது இக்கோரிக்கையை இலங்கை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் எண்பதையும் வலியுறுத்தும் என அவர் தெரிவித் துள்ளார்.

பிரிட்டனிலிருந்து வெளியாகும் 'கார்டியன்' இதழில் தாம் எழுதியுள்ள கட்டுரையில் இவ்விடயங்களைத் தெரிவித்துள்ள அவர், இலங்கை தோற்கடிக்கப்படுவது உலகம் முழுவதிலும் உள்ள மனித உரிமை ஆர்வலர்களுக்கு சாதகமாக அமையும் என்றும் அதில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

தனது சொந்த மக்களைக் கடத்தும் - சித்திரவதை செய்யும் - நாட்டிற்கு உலகின் முக்கிய மனித உரிமைக் கவுன்ஸிலில் இடமில்லை என்பது வெளிப்படையான விடயமாகத் தோன்றும்.

எனினும், அவ்வாறல்ல. இலங்கை அதன் மனித உரிமை நிலைவரம் குறித்துத் தொடர்ச்சியாக விமர்சனத்துக்குள்ளாகியுள்ள போதிலும் மனித உரிமை கவுன்ஸிலில் இரண்டாவது தடவையாக இடம்பெறுவதற்குப் போட்டியிடுகின்றது. இதற்கான வாக்கெடுப்பு மே 21 ஆம் திகதி நியூயோர்க்கில் இடம்பெறுகின்றது.

இலங்கையில் மனித உரிமை மீறல்களுக்குள்ளானவர்களுக்காகவும் சர்வதேச ரீதியில் பாதிக்கப்பட்டவர்களுக்காகவும் இலங்கையின் முயற்சி தோல்வியடைவதை உறுதிப்படுத்துவது உலக அரசுகளின் கடப்பாடாகும். (சி)

---

முதலமைச்சர் தெரிவுக்கு

# சிங்கள உறுப்பினர்களின் கருத்தையும் கேளுங்கள்!

## ஜாதிக ஹெல உறுமய சீறுகிறது

கொழும்பு, மே 16

கிழக்கு மாகாண முதலமைச்சர் தெரிவின்போது அந்த மாகாணசபைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள சிங்கள உறுப்பினர்களதும் மற்றும் சிங்களத் தலைவர்களினதும் கருத்துக்களும் உள்வாங்கப்பட வேண்டும்.

- இவ்வாறு அரசுக் கூட்டமைப்பின் பங்காளியான ஜாதிக ஹெல உறுமய தெரிவித்திருக்கின்றது.

சிங்களப் பிரதிநிதிகளின் கருத்துகள் கவனத்தில் எடுக்கப்படாமல் தமிழ், முஸ்லிம் உறுப்பினர்களின் விருப்பத்தின் படியே முதலமைச்சர் தெரிவுசெய்யப்படுவதைக் கடுமையாக எதிர்ப்பதாகவும் அக்கட்சி அறிவித்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகப் பேச்சாளரான ஸ்ரீவர்ணசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

பிள்ளையானுக்கு முதலமைச்சர் பதவி வழங்கப்பட வேண்டும் என தமிழர்களும், ஹிஸ்புல்லாவுக்கு முதலமைச்சர் பதவி வழங்கப்பட வேண்டும் என முஸ்லிம்களும் கோரிக்கை விடுக்கின்றனர். எனினும், சிங்களப் பிரதிநிதிகளின் கருத்துகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை - என்றுதெரிவித்துள்ளார் (சி)

---

## நீதி அமைச்சு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யின் அறிவுறுத்தலின்படி மேற்படி கைதிகளின் நிலைமையை நேரில் கண்டறிவதற்காகத் தாங்கள் பூஸாவுக்கு வந்திருக்கின்றனர் என்று அதிகாரிகள் குழு கைதிகளிடம் தெரிவித்தது என்றும் அறியவந்தது.

பூஸாவில் தாங்கள் நிர்வாணமாக்கப்பட்டுத் தாக்கப்பட்டமை குறித்து அதிகாரிகள் குழுவுக்குத் தாங்கள் விளக்கினர் என்றும் கைதிகள் தரப்பில் கூறப்பட்டது.

சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமான என்.ஸ்ரீகாந்தா இந்தக் கைதிகளின் அவலநிலை குறித்து நீதி அமைச்சர் டிலான் பெரேராவிடமும் பிரதி நீதி அமைச்சர் வீ.புத்திரசிகாமணியிடமும் முறைப்பாடு செய்திருந்தார் என்பது தெரிந்ததே. (உ)

---

## இராணுவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வத் தளபதிக்கு விளக்கிக் கூறினார்.

களநிலைவரம் குறித்து கேட்டறிந்த தளபதி மேலதிக உத்தரவுகளை அவர்களுக்கு வழங்கினார். (அ-1)

---

## கிழக்கு மாகாண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து வரக்கூடிய இறுதிப் பதிலுக்காகத் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு காத்திருப்பதாகவும், இணக்கப்பாடு ஏற்படாவிட்டால் ஆறுஉறுப்பினர்களும் பதவி விலகுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் யோசனைகளைத் தீவிரமாக ஆராய்ந்த பின்னர் இந்த நெருக்கடிக்கு சகலரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வைக் காண்பார் எனவும் அந்த இணையத்தளச் செய்தி மேலும் தெரிவித்துள்ளது. (உ)

---

## ஜனநாயகம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலமைச்சர் பதவியைக் கைப்பற்ற பிள்ளையானும் ஹிஸ்புல்லாவும் போட்டி போடுகின்றனர். இப்பதவியைப் பிள்ளையானுக்கு வழங்குவதற்கும் அதேபோல் ஹிஸ்புல்லாவுக்கு வழங்குவதற்கும் அரசு அவர்களுக்குத் தனித்தனியாக வாக்குறுதியளித்தது என்றும் சொல்லப்படுகிறது. அதிகூடிய ஆசனங்களைப் பெறும் கட்சிகளுக்கு முதலமைச்சர் பதவி வழங்கப்படும் என்று ஜனாதிபதி கூறினார் எனச் சொல்லப்படுகிறது.

### இனக்கலவரத்தை தூண்ட முயற்சி

அப்படியாயின் ஹிஸ்புல்லா தரப்பே 08 ஆசனங்களுடன் முன்னிலையில் உள்ளது. அதுமாத்திரமின்றி 17 முஸ்லிம்கள் மாகாணசபை உறுப்பினர்களாத் தெரிவு செய்யப்பட்டும் உள்ளனர்.

இந்த நிலைமையை சரியானமுறையில் எதிர்கொண்டு தீர்வுகாண அரசு நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை.

முதலமைச்சர் பதவி தமிழருக்கா அல்லது முஸ்லிமுக்கா என்ற போட்டியே இப்போது உள்ளது. இதைச் சாதகமாகப் பயன்படுத்தும் அரசு, அந்த இரண்டு இனங்களுக்கிடையேயுள்ள இனக்கலவரத்தைத் தூண்டிவிட முற்படுகிறது.

கடந்த கால அரசுகளால் தமிழர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமையினாலேயே தமிழர்கள் மாற்று வழியைத் தேடி ஆயுதம் ஏந்தத் தொடங்கினர்.

இன்று முஸ்லிம்களுக்கும் இந்த நிலை ஏற்பட்டுவிடுமோ என்று அஞ்சுகிறோம். ஜனநாயகம் மறுக்கப்படுவதால் முஸ்லிம்கள் ஜனநாயகத்தின்மீதான நம்பிக்கையை சிறிது சிறிதாக இழந்து வருகின்றனர்.

இவர்கள் விபரீதமான முறையில் மாற்று வழியைக் கையாண்டு விடுவார்களோ என்றுநாம் அஞ்சுகின்றோம். அவ்வாறானநிலைமை ஏற்படாதிருக்க அரசு நேர்மையாகச் செயற்பட வேண்டும்.- என்றார். (சி)

---

## வடபோர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரிழந்தார் என்றும் மேலும் ஒருவர் காணாமற் போயுள்ளார் என்றும் நான்குபேர் படுகாயமடைந்த நிலையில் அநுராதபுர வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்றும் தெரிவித்தனர். (அ-சி)

---

## கிழக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை கைப்பற்றியிருந்தது. இதில் எட்டு முஸ்லிம்களும் , ஆறு தமிழர்களும், நான்கு சிங்களவர்களும் உள்ளனர்.

ஜனாதிபதி பெரும்பான்மை கருத்தின் அடிப்படையில் முதலமைச்சரை நியமிக்கத் தீர்மானித்தால் நான்கு சிங்கள உறுப்பினர்களின் கருத்து முக்கியமாக அமையும் எனக் கல்வியமைச்சர் சுட்டிக்காட்டினார்.

முதலமைச்சர் பதவிக்கு யாரை நியமிப்பது என்ற விடயத்தில் ஜனாதிபதியும் அரசும் சிங்கள சமூகத்தின் கருத்தை கவனத்தில் எடுக்க வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய வேண்டுகோள் விடுத்த பின்னரே அமைச்சரின் மேற்படி கருத்து வெளியாகியுள்ளது.

இதேவேளை, கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவிக்கு பிள்ளையானே மிகப் பொருத்தமான தெரிவு என ஜனாதிபதியின் நெருங்கிய சகாவும் போக்குவரத்து அமைச்சருமான டலஸ்அழகப்பெருமகுறிப்பிட்டிருந்தார்.

இதேசமயம் -

கிழக்கு மாகாண முதலமைச்சர் யார் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று அறிவிப்பார் - என ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா நேற்றுக் கூறினார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே இத்தகவலை அவர் வெளியிட்டார்.

### ஒத்திவைப்பு

ஆனால்-

கிழக்கின் முதலமைச்சர் தெரிவில் இறுதி நேரத்திலும் இழுபறி தொடர்ந்ததால் முதலமைச்சர் பதவியேற்பு நிகழ்வை மஹிந்த ராஜபக்ஷ ஒத்திவைத்துள்ளார். இதனை ஜனாதிபதி செயலக வட்டாரங்களும் உறுதி செய்தன.

கிழக்கின் முதலமைச்சர் யார் என்பதைத் தெரிவு செய்வதற்காக நேற்று மாலை ஜனாதிபதி செயலகத்தில் முக்கியகூட்டம் ஒன்று நடைபெற்றது.

ஜனாதிபதி ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் முஸ்லிம் அமைச்சர்களும் பங்கேற்றனர்.

கிழக்கின் முதலமைச்சராக எம்.எல்.ஏ. ஹிஸ்புல்லாவையே நியமிக்க வேண்டும் என்று முஸ்லிம் அமைச்சர்களும், பிள்ளையானையே நியமிக்க வேண்டும் என்று ஜனாதிபதியும் விடாப்பிடியாக நின்றதால் கூட்டத்தில் பெரும் குழப்ப நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து முதலமைச்சர் பதவியை சுழற்சி முறையில் பங்கிடுமாறும் முதலில் இரண்டு வருடங்கள் பிள்ளையான் முதலமைச்சராக பதவியேற்கட்டும் என்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்த யோசனைக்கு முஸ்லிம் அமைச்சர்கள் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்நிலையில் முஸ்லிம் அமைச்சர்களின் வேண்டுகோளை ஏற்காது முதலமைச்சர் பதவியேற்பு நிகழ்வை மஹிந்த ஒத்திவைத்தார். ஜனாதிபதியின் இந்த நடவடிக்கை காரணமாக முஸ்லிம் அமைச்சர்களிடையே இந்த விவகாரம் பெரும் பூதாகரமாக உருவெடுத்திருக்கிறது எனவும் கூறப்படுகின்றது. (அ-உ)


புதிய பிரிவுகள் ஆரம்பம்!

CB Computer Academy

Station Road, Kondavil. 021-4590291

17.05.08 (Sat)

- ICT ( Grade 10 & 11 )
- GIT (3 Month Speed Bath)
- Computerized Accounting
- Computer Hardware & Networking
- Programming Languages (Java, VB6, VB.NET, Pascal)
- Ms Office, DTP
- Internet and E-Mail


## மரண அறிவித்தல்

### திருமதி மகாலக்சுமி இராஜேந்திரம்

பருத்தித்துறை சிவன்கோயிலடியைப் பிறப்பிடமாகவும் முத்திரைச்சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகாலக்சுமி இராஜேந்திரம் நேற்று (15.05.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசாபத்தர் - மீனாட்சி ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை பத்தர்- பத்மாவதிஅம்மா ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்ற இராஜேந்திரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பராசக்தி, பாக்கியம், சொக்கலிங்கம் மற்றும் பாலகிருஷ்ணன் (ஸம்பியா) ஆகியோரின் சகோதரியும், சித்திரவடிவாம்பாள் (நீர்கொழும்பு), காலஞ்சென்றவர்களான லட்சுமணன், கனகசுந்தரம், தேவலட்சுமி மற்றும் பத்மநாதன், சந்திரசேகரம் ஆகியோரின் மைத்துனியும், பாமினி, சாந்தினி (தாதிய உத்தியோகத்தர்கள், யாழ். போதனா வைத்தியசாலை), ரமேஸ் (கட்டடத் திணைக்களம், வவுனியா), சதீஸ் (மருந்தாளர், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை) ஆகியோரின் தாயாரும், தமிழ்மாறன் (படப்பிடிப்பாளர்), தியாகராஜன் (குகன் வாச் வேக்ஸ், பருத்தித்துறை), நிசாந்தி (பிரதேச செயலகம், வவுனியா), முருகதீபா ஆகியோரின் மாமியும், குருபரன், சாயினி, கௌசல்யா, தமிழினி, வித்தியாதரன், சீனந், சாரங்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2008) வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

16, செம்மணி வீதி,
நல்லூர்

தகவல்:
குடும்பத்தினர்


துரிதப்பட்டல் கணக்கீடு நாளை ஆரம்பம்

*CBF&DBF (sat & Sun 7-8am)
*AAT Stage I & II (sat & Sun 8-9am)

by: J.T.அழகன் B.Com, HN Dip in acc

COLLEGE OF ACCOUNTING

பலாலி வீதி, திருநெல்வேலி.

தேவை

நல்லூர் அரசடி வீதியில் அமைந்துள்ள ஜனசக்தி சன சமூக நிலையத்தில் உள்ள தையலகத்துக்கு ஆடைகள் வெட்டித்தைக்கத் தெரிந்த பெண்பிள்ளைகள் தேவை. ஞாயிறு 9மணி தொடக்கம் 12 மணிவரை நேரில் வந்து சந்திக்கவும்

உரிமையாளர்: பொ.வசந்தன்

எடிசன் அக்கடமி

2வது கிளை, கொக்குவில் பொதுச்சந்தை எதிர் வீதி குளப்பிட்டி லேன், கொக்குவில்.

அழைப்பு மடல்

பெற்றோர் - ஆசிரியர் ஒன்று கூடலும் முதலாம் தவணை (2008) பரிசளிப்பு நிகழ்வும்

முதலாம் தவணை ஆற்றுகைத் திறன் மதிப்பீட்டில் சிறப்பான நிலை காண் மாணவரை வாழ்த்தி பரிசளித்துவகையுறு மதிப்பார்ந்த நிகழ்வு காண்மின்!

2008.05.17 சனிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு

அகம் மகிழ்ந்து அழைக்கின்றோம் வருக! வருகவே!!

நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்

SPECIAL ENGLISH CLASS
(100 Hours Intensive Course)
London English

100 மணித்தியாலங்களில் ஆங்கிலம் பேச - எழுத - வாசிக்க நவீனமுறையில் இலகுவாக கற்கலாம்.

- தினசரி வகுப்பு * சனி - ஞாயிறு வகுப்பு
- ஆங்கில மொழியில் கல்விகற்போர் - வெளிநாடு செல்வோர் உத்தியோகம் பார்ப்போர் கற்கலாம்.
- அச்சடித்த பாடங்கள் * வீடியோ பாடங்கள்
- IELTS கல்வி

Lectures By: Mr.A.Rajagapalan, Mr.B.Ruban

ஆரம்பம்:- 19.05.2008

JAFFNA Technical Institute
45, Clock Tower Road, Jaffna
Phone: 222 3127


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமி[illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.05.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org